காஞ்சி

ஆசிரியர் அண்ணாதுரை

விலை 20 காசு



(1) கோவா, எங்களுக்கு என்று மராட்டியர் மார்தட்டுகிறார்களே அதுபோல புதுவை காரைக்கால் எமகு என்று தமிழகக் காங்கிரஸ் சர்க்கார் கேட்காதா?

கேட்கும்! புதுவை காரைக்கால் வேண்டும் என்று கேட்க துணிவு வேண்டுமே! அதற்கு எங்கே போவது!!

(2) போபாலில் காமராஜருக்குத் தமிழிலேயே வரவேற்புப் பத்திரம் கொடுத்தார்களாமே, தெரியுமா?

ஓ! தெரியுமே! கொடுத்தது போபாலில் — கொடுத்தவர்கள் அங்கு உள்ள தமிழ்ச் சங்கத்தார்! தமிழ்ச் சங்கம் தமிழ் மொழியில் தமிழ் மட்டுமே தெரிந்த ஒரு தமிழருக்கு வரவேற்புக் கொடுத்தது கேட்டா வியப்பு அடைய வேண்டும்!!

(3) இந்தியாவுக்குக்கேடு செய்யும் எண்ணம் கொண்டவர்கள் யார்?

சீனாவும் பாகிஸ்தானமும்! இப்போது கூடிக் குலாவுகின்றன இரண்டும்.

(4) அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளில் எந்த நாட்டினிடம் அணுகுண்டு போன்ற அழிவுச் சக்தி அதிகம்?

இரு நாடுகளும் இதிலே தமக்குத்தான் வலிவு அதிகம் என்று சொல்லிகொள்கின்றன ஆனால் விஞ்ஞான வளர்ச்சியின் வேகம் சோவியத் நாட்டிலே வளர்ந்திருப்பதையும், சந்திரமண்டலத்திற்குச் செல்லும் முயற்சியில் ரஷியா அடைந்துள்ள முன்னேற்றத்தையும் பார்க்கிறபோது ரஷியாவிடமே அந்த வலிவு அதிகம் இருக்கும் என்று தெரிகிறது. ஆனால் அமெரிக்க ராணுவத்துறை அதிகாரி ஒருவர், அமெரிக்காவிடம் 20,000 அணுகுண்டுகள் இருப்பதாகவும், அவைகளிலே 300 குண்டுகள் போதும் சோவியத் ரஷியாவை நாசமாக்க என்றும் பேசியிருக்கிறார்.

(5) காஷ்மீரின் முன்னாள் முதலமைச்சர் பக்ஷிகுலாம்மீது வழக்குப் போட்டது என்ன ஆயிற்று?

வழக்கு போடாமலே சிறையில் வைத்திருந்தார்கள்; பிறகு விடுதலை செய்தார்கள்; அவர்மீது விசாரணை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள், ஊழல் குற்றம் காரணமாக. ஆனால் அவர் இப்போதும் டில்லிக்கு வருகிறார், லால்பகதூரைப் பார்க்கிறார்: காஷ்மீர் சட்டசபையில் உறுப்பினராக இருக்கிறார்; காங்கிரஸ் கட்சியை காஷ்மீரில் ஏற்படுத்தக் கூடாது என்று முதலிலே கூறிக் கொண்டிருந்தவர் இப்போது தமக்கு வேண்டியவர்களை எல்லாம் காங்கிரசில் சேர்த்து, காங்கிரசைக் கைப்பற்றத் திட்டமிடுகிறார். போகிற போக்கைப் பார்த்தால் மறுபடியும் பக்ஷியே காஷ்மீர் முதலமைச்சராகிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

(6) கடல் 'பசு' இருக்கிறதாமே, உணமையா?

கடலில் உள்ள பலவிதமான மீன்கள், தரையில் உள்ள மிருகங்களின் வடிவத்தோடு உள்ளன. கடல் யானை, நீர்குதிரை, கடல் பசு என்று பெயரிருப்பது, அவற்றின் தோற்றத்தைக் கண்டு. கடல் 'பசு' இதுபோன்றதே. குட்டிகளுக்குப் பாலூட்டும் வகை இது. முகம் தட்டையாகவும் மேல் உதடு தடித்தும் இருக்கும். ஐந்து முதல் ஏழடிவரை இது வளர்ந்திருக்கும்.

(7) இன்று தனி சுதந்திரநாடுகளாக உள்ளவைகள், ஒரு காலத்தில் பெரிய சாமராஜ்யத்தின் பகுதிகளாக இருந்தனவா?

ஆமாம்! இந்தியாவே விடுதலை பெறுவதற்கு முன்பு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஒரு பகுதி என்றுதானே கூறப்பட்டது. படைபலத்துக்கு மதிப்பு அதிகம் இருந்த காலத்தில் பல நாடுகளை அடிமைகொண்டு சாம்ராஜ்யங்கள் அமைக்கப்பட்டன. பிறகு அந்த நாடுகளிலே தேசீய உணர்வும் விடுதலை ஆர்வமும் ஏற்பட்டு, கொந்தளிப்பு, புரட்சி எனும் முறைகள் தோன்றி, சாம்ராஜ்யத்திலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திர நாடுகளாயின.

கிரீஸ், செர்பியா, ருமேனியா, பல்கேரியா, மான்ட்டனெக்ரோ- இவைகள் ஒருகாலத்தில் உதுமானிய சாம்ராஜ்யத்தில் அடங்கிக்கிடந்தன. உதுமானிய சாம்ராஜ்யத்தை அமைத்து கொடி கட்டி நடத்திவந்தது துருக்கி. பிறகு ஒவ்வொரு நாடாக விடுதலைபெற்றன. உதுமானிய சாம்ராஜ்யம் கலைக்கப்பட்டுவிட்டது. அதுபோலவே இதாலி, அங்கேரி, செக்கோஸ்லோவேகியா, யுகோஸ்லாவியா ஆகிய நாடுகள் ஒரு காலத்தில் ஆப்ஸ்பர்க் சாம்ராஜ்யத்தில் அடங்கிக்கிடந்தன. சாம்ராஜ்யம் நடத்தும் காலம் மலை ஏறிவிட்டது. இப்போது சாகசம், சரக்கு, பணம் இவைகளைக் கருவியாகக்கொண்டு நாடுகளைத் தமது பொம்மைகளாக்கிக்கொள்ளும் வல்லரசு முறை நடந்து வருகிறது.

(8) ஊழலை ஒழிப்பதற்கு என்ன தான வழி?

சுப்ரீம் கோர்ட் நீதிபதியாகப் பணியாற்றிய மகாஜான் என்பவர், தெளிவாகச் சொல்லி இருக்கிறாரே, தேர்தல் நிதியாகப் பெரிய முதலாளிகளிடமிருந்து காங்கிரஸ் கட்சி பணம் பெறுவதிலிருந்துதான் ஊழலே ஆரம்பமாகிறது என்று. அந்த கெட்ட வழக்கத்தை விட்டுவிட வேண்டும். அப்போது அதைத் தொடர்ந்து மற்ற இடத்து ஊழல் ஒழியும் என்று. அவர் பேச்சையே கேட்காதவர்கள் என் பேச்சையா கேட்பார்கள். ஆனால் ஒன்று, ஊழலை ஒழிக்காதிருப்பவர்களைத் தேர்தலிலே பொதுமக்கள் ஒழித்துக் கட்டினால் ஊழல் ஒழிந்துவிடும்.

காஞ்சி

மலர் 1 23—5—65 இதழ் 41

ஒட்டிக்கொண்டிருக்கலாமா!!

முதலமைச்சர் பக்தவத்சலத்திடம் காமராஜருக்குக் கோபம் இருக்குமானால், அதனை வெளிப்படையாகக் காட்டுவதுதான் நேர்மை. தயக்கம் காட்டத் தேவையில்லை.

காமராஜர் எதையும் ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்துக் கூறிடும் இயல்புள்ளவர் என்று பேசிக் கொள்ளப்படுவது உண்மையானால், அவர் பக்தவத்சலம் ஆட்சியிலேயும் பக்தவத்சலம் அவர்களுடைய இயல்பிலேயும் நடவடிக்கைகளிலேயும் குற்றம் இருக்கிறது என்றால், அதனைக் காட்டவும் கண்டிக்கவும், திருத்தவும், துணிவுடன் கடமையாற்ற வேண்டும்.

குத்திக் காட்டுவது, மறைமுகமாகப் பேசிக் காட்டுவது எனும் முறைகள் தேவையுமில்லை, அதற்குக் காரணமும் இல்லை.

என்னைக் கண்டிக்கவும் என் ஆட்சியைக் குறை கூறவும் இவர் யார்? என்று பக்தவத்சலம் கூறமாட்டார்—அவருக்கு ஏற்படும் கோபத்தைக் கொட்டிக் கொள்ள, ஆத்திரத்தைத் தணித்துக் கொள்ள, பக்தவத்சலம் அவர்களுக்கு எளிதான, சுவையான வேறு வழி இருக்கிறது; கழகத்தின்மீது பாய்ந்து மகிழ்ச்சி தேடிக்கொள்வார். காமராஜர்மீது கடுகளவு கூடக் கோபித்துக் கொள்ளமாட்டார்; கோபம் காட்டினால் பதவியே பறிபோய்விடக் கூடும் என்பதை நன்றாக உணர்ந்திருப்பவர். அனுபவசாலியல்லவா!!

எனவே, முதலமைச்சரைக் கண்டித்து அவருடைய கோபத்துக்கு ஆளாகிவிடக்கூடாதே என்ற அச்சமும் கவலையும் காமராஜருக்கு ஏற்பட நியாயமில்லை.

ஆயினும், காமராஜர் தமது பேச்சிலே, ஏதாவதொரு மறைமுகமான முறையில், பக்தவத்சலனின் ஆட்சி பற்றிக் குறைகூறியபடிதான் இருக்கிறார். பக்தவத்சலம் அவர்களுக்கு மனச்சங்கடம் ஏற்படத்தான் செய்யும்—எனினும் துளியும் அதனை அவர் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. பொறுமைசாலி!!

மாணவர்கள் மனதிலே அச்சமும் அய்யப்பாடும் ஏற்பட்டிருப்பதை, நாம் போக்கியிருக்க வேண்டும்! மாணவர்களைச் சந்தித்துப் பேசி இருந்திருக்க வேண்டும்—என்று இரு கிழமைகளுக்கு முன்பு காமராஜர் பேசினார்.

மாணவர்களைச் சந்திக்க முதலமைச்சர் மறுத்துவிட்டார் என்று கூறப்பட்டதை, முதலமைச்சர் மறுத்தார்; நான் எப்போது சொன்னேன்; யாரிடம் சொன்னேன் என்று கேட்டார்.

முதலமைச்சர் இவ்விதம் கூறிய பிறகு, காமராஜர் பேசியிருக்கிறார், மாணவர்களைச் சந்தித்துப் பேசாதது தவறு என்று.

இதனுடைய பொருள் என்ன? மாணவர்களைச் சந்திக்க முடியாது என்று எப்போதும் எவரிடமும் சொன்னதில்லை என்று முதலமைச்சர் கூறியிருப்பதை காமராஜர் நம்ப மறுக்கிறார் என்பதுதானே!

மாணவர்களைச் சந்திக்க மறுத்துவிட்டார் முதலமைச்சர் என்று புகார் கூறினார்களே, இதோ முதலமைச்சரே கூறுகிறாரே, மாணவர்களைச் சந்திக்க முடியாது என்று சொன்னதில்லை என்பதாக, ஏன் இப்படி ஒரு பழி சுமத்துகிறார்கள் பக்தவத்சலம் அவர்கள்மீது என்றுகூடச் சிலர் கேட்டனர்.

ஆனால், தலையில் ஓங்கிக் குட்டுவதுபோல, காமராஜர் பேசினார், மாணவர்களைப் பார்த்துப் பேசாதது தவறு என்று. மற்றவர்கள்மீது பாய்ந்து தாக்கும் பக்தவத்சலம், காமராஜர்மீது தமது கோபப் பார்வையைச் செலுத்த முடியுமா! பதவி கொடுத்தவராயிற்றே! கொடுத்ததைப் பறித்துக்கொள்ளும வல்லமையும் உள்ளவராயிற்றே!! அதனால் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்துவிட்டார். காரியவாதி!!

மாணவர்களைச் சந்தித்துப் பேசி அவர்கள் மனதிலே மூண்டுள்ள சந்தேகத்தையும் அச்சத்தையும் போக்கத தவறிவிட்டார் பக்தவத்சலம் என்று குற்றம் சாட்டுகிறார் காமராஜர்.

அது மட்டுமல்ல! மொழிப் பிரச்சினை பற்றிச் சரியான விளக்கம் கூறி, மக்களுக்குத் தெளிவு ஏற்படுத்தவும் முதலமைச்சர் தவறிவிட்டார் என்ற மற்றோர் குற்றச்சாட்டையும் மறைமுகமாக ஏவுகிறார் காமராஜர்.

இத்தனைக்கும் முதலமைச்சர் முன்பெல்லாம் 'சொற்பொழிவு' நிகழ்த்துவார்; இப்போது ஒட்டிக் காட்டப்படும் சுவரொட்டிகள், முதலமைச்சர் 'அறிவுரை' நிகழ்த்துவதாகவும், 'மொழிப் பிரச்சினைக்கு விளக்கம்' அளிப்பதாகவும தெரிவிக்கின்றன.

என்றாலும், முதலமைச்சரின் அறிவுரை-விளக்க உரை என்பவைகளைக் காமராஜர், மதிப்பதாகவோ அவைகளை மக்கள் மதித்திடுவார் என்று ஒப்புக்கொள்வதாகவோ காணேம். முதலமைச்சரின் அறிவுரை—விளக்க உரை என்பவைகளால் பயன் ஏற்படாது, பயன் ஏற்படவில்லை, மக்களுக்குத் தெளிவு உண்டாகவில்லை என்று கருதுகிறார்; எனவேதான், தாமே கிளம்பி ஒரு சூறாவளிப் பயணம் மேற்கொண்டு, 'தெளிவு' தெளித்தபடி இருக்கிறார்.

பக்தவத்சலம் அவர்களால் மக்களுக்கு விளக்கம் அளிக்க இயலவில்லை என்று குற்றம் சாட்டுவது போலல்லவா இருக்கிறது இந்தப் போக்கு? இதுவும் பக்தவத்சலம் அவர்களுக்கு எரிச்சலைக் கிளப்பத்தான் செய்யும். கிளப்பி? இருப்பதைக் கெடுத்துக்கொள்ள அவர் என்ன ஏமாளியா!! சொன்னால் சொல்லிவிட்டுப் போகட்டும் என்று இருந்துவிடுகிறார்.

இவற்றை எல்லாம்விட மிகக் கடுமையான குற்றச்சாட்டை வீசியிருக்கிறார் காமராஜர், வடார்க்காடு மாவட்டச் சூறாவளிச் சுற்றுப்பயணத்தின்போது,

பணக்காரர்கள் பக்கம் பரிவு காட்டி அவர்களுக்குச் சாதகமாக நடந்துகொள்வதும், ஏழை

களைத் தொல்லைப்படுத்துவதும் தமது போக்கா கக் கொண்ட சர்க்கார் அதிகாரிகள் இருக்கிறார் கள் சிலபேர் நான் முதல் மந்திரியாக இருந்த வரையில், இந்தக் கேட்டினை முளையிலேயே கிள்ளிப் போட்டுக்கொண்டு வந்தேன். நான் பதவியைவிட்டுப் போய்விட்டதும், அந்த அதி காரிகள், பழைய போக்கிலே நடந்துகொண்டு வருகிறார்கள்.

என்று காமராஜர் பேசியிருக்கிறார்.

இதைவிடக் கடுமைமிக்க கண்டனம் வேறு இருக்க முடியாது, பக்தவத்சலனாரின் ஆட்சி முறைக்கு.

எவ்வளவு அக்கறையற்ற தன்மையும், திறமை யற்ற தன்மையும் இருந்தால், காமராஜர் முளையிலேயே கிள்ளி எறிந்த கேடு மறுபடியும் துளிர்த்திட பக்த வத்சலனாரின் ஆட்சி இடம் கொடுத்திருக்கும்? ஆகுமா இந்தப் போக்கு?—என்றெல்லாம் கேட்கத் தோன்றும், எவருக்கும்; காமராஜரின் பேச்சைக் கேட்டதும்.

ஏழைக்கு அநீதி இழைத்து. பணக்கார ருக்குப் பக்கமேளம்கொட்டிடும் அதிகாரிகள் சிலர் இருக்கிறார்கள் என்பதையும்,

அப்படிப்பட்டவர்களைத் தம்மால்அடக்கி வைக்கவும். அவர்களின் போக்கை முளை யிலேயே கிள்ளி எறிந்திடவும் முடிந்தது என்பதையும்,

அந்தத் திறமையும் அக்கறையும் இன் றுள்ள பக்தவதசலனாரின் ஆட்சிக்கு இல்லை என்பதையும்,

அதன் காரணமாக ஏழையைக் கொடுமை செய்யும் காரியத்தில் சில அதி காரிகள் பழயபடி ஈடுபட்டு வருகிறார்கள் என் பதையும்,

காமராஜர் தமது பேச்சிலே எடுத்துக் காட்டிவிட்டார். இதைவிடப் பலமான கண்டனம் வேறு இருக்க முடி யுமா! இதனைக் கேட்டுக்கொண்டும், சகித்துக்கொள்ள எப்படி மனம் இடம் கொடுக்கிறது முதலமைச்சருக்கு? புரியவில்லை!

தமது ஆட்சியிலே அதிகாரிகளில் சிலர், ஏழைக் குக் கொடுமை செய்திடும் போக்கில் நடந்துகொள் கிறார்கள், என்ற நிலை இருப்பதை வேறு எவராகிலும் எடுத்துச் சொல்லியிருந்தால், பக்தவத்சலம் எத்தனை ஆர்ப்பரிப்பு செய்திருப்பார்; என்னென்ன இழிமொழி களை உமிழ்ந்திருப்பார்; எவ்வளவு கோபத்தைக் கக்கி இருப்பார்! இப்போது? வலிக்கிறதே என்று கூறி அழுதிடக்கூட முடியாமல் ஆண்டையிடம் அடிபட்டுக் கிடக்கும் அடிமைகள்பற்றிக் கதைகளிலே பார்க் கிறோமே அவ்விதமாக அல்லவா நிலைமை இருந்திடக் காண்கிறோம்.

அக்கறை இல்லை
திறமை இல்லை
அதிகாரிகளை அடக்கி ஆளத்தெரியவில்லை

என்று பேசுகிறார் காமராஜர்; தனியாகச் சந்தித்துக் கூடப்பேசவில்லை; பொதுமக்களைக் கூட்டிவைத்துப் பேசுகிறார்; பக்தவத்சலம் என்ன பதில் அளிக்கிறார்?

அவ்விதமான போக்கிலே எந்த அதிகாரி யும் இல்லை என்றும்,

அப்படிச் சிலர் நடந்துகொண்டால் அவர் களை அடக்கிட கேடு களைந்திடத் தமக்குத் திறமை உண்டு என்பதையும்,

எடுத்துக் கூறிடும் துணிவு இருக்கிறதா, பக்தவத்சலம் அவர்களுக்கு? மிச்சம் மீதிகூட இருக்காதபடிக்குத் தான், அவர் தமக்கு உள்ள துணிவு அவ்வளவையும கழகத்தின்மீது கொட்டிவிட்டாரே! எனவே, காமராஜர் கசையடிகொடுக்கிறார், இவர் துடைத்துக்கொள்கிறார் ஏன்? கசையடிகொடுத்திடுபவரின் தயவினால் அல்லவா பசையுள்ள பதவி கிடைத்தது. அவரைப் பகைத்துக் கொள்ளலாமா!! முதலமைச்சர் என்ன, இன்று கேற்ற அரசியல்வாதி! முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அதிலே மூழ்கி மூழ்கி எழுந்தவராயிற்றே.

ஒரு ஆட்சியின் தலைவர்மீது, திறமைக் குறைவு இருப்பதாக எடுத்துக்காட்டுவதைவிடக் கேவலம் வேறு இருக்கமுடியாது. ஆனால் அதனையும் தாங்கிக் கொள்ளவேண்டி இருக்கிறது அவருடைய நிலை அப் படி! பரிதாபம்!!

ஆனால், காமராஜர் ஏன், வெளிப்படையாகப் பேச மறுக்கிறார்! குத்திக்காட்டும் விதமாக ஏன் நடந்து கொள்கிறார்? பக்தவதசலம் ஆட்சியின் திறமைக் குறைவைப் பொதுமக்களிடம் எடுத்துக்காட்டுவதன் மூலம், காமராஜர் என்ன நடந்திடவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்?

ஆட்சியிலே ஏற்பட்டுள்ள கேட்டினைக் களைந்திட வேண்டுமாயின், கோட்டை மைதானத்திலோ, பேட் டைத் திடலிலோ, கூட்டம்போட்டு, எனக்கு இருந்த திறமை இவருக்கு இல்லை என்று இடித்துப் பேசுவதா முறை!! இல்லையே! கோட்டையில் கொலுவிருக்கும் கோமானை வரச்சொல்லி, புத்திமதி கூறித் திருத்த வேண்டும்.

ஏழையைக் கொடுமை செய்கிறார்கள் இன்னின்ன அதிகாரிகள் என்ற விவரம் கொடுத்து, அவர்களை இன் னின்ன முறைகளிலே அடக்கவேண்டும் என்ற வழி யும் கூறி, காரியத்தைச் சாதிக்கவேண்டும்; ஏழைக்கு ஏற்பட்டுவிட்ட கஷ்டத்தைப் போக்கவேண்டும்—அத னைச் செய்யாமல், ஊர் மக்களைக் கூட்டிவைத்து, கேட் டார்களா சேதி! பார்த்தீர்களா அநியாயம்! என் காலத் திலே இப்படியா இருந்தது! என்று பேசுவது எதற்கு?

உண்மைதான்! நீங்கள் பதவியைவிட்டுவிட்டுப் போய்விட்டதால், பல கஷ்டம் ஏற்பட்டுவிட்டது; பக்த வத்சலம் ஆட்சியிலே, ஏழையிடம் பரிவுகாட்டும் இயல்பு இல்லை, அதிகாரிகளை அடக்கி ஆளும் திறமை இல்லை; ஆகவே பக்தவத்சலனாரை அனுப்பிவிட்டு, பழயபடி நீங்களே முதன் மந்திரியாக வந்திருந்து ஆட்சி நடாத்துங்கள் என்று பொதுமக்கள் கூறவேண் டும் என்று எதிர்பார்க்கிறாரா காமராஜர்?

இதுதான் அவருடைய நோக்கம் என்றால், அதனை வெளிப்படையாகவே கூறிடலாமே! கூச்சமாக இருக் கிறது என்றால, இதனைக் கூறிடச்சொல்லி ஏவிடலாமே இனிப்புக் கண்டவர்களை!

இப்படியா ஊரூருக்கும் சென்று, பக்தவத்சல னாரின் ஆட்சி முறையினைக் கேவலப்படுத்திப் பேசிக் கொண்டிருப்பது!! இத்தனையையும் வாங்கிக் கட்டிக் கொண்டாகிலும் பதவியில் ஒட்டிக்கொண்டுதான் இருந்தாகவேண்டுமா என்பதனை இனியாகிலும் யோசிக்கவேண்டாமா பக்தவத்சலனார்!! ✽

தம்பி

சொக்கப்பனிடம் பட்ட கடன்

சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சோணசலத்திடம் புதிதாகக் கடன் வாங்குபவர் உண்டு; சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சொக்கப்பனிடமே மேலும் கடன்வாங்குபவர் உண்டா? கண்டதுண்டா?

இல்லே! என்கிறீர்கள். அப்படி ஒருவர் எப்படி இருக்க முடியும் என்று கேட்கிறீர்கள். மலேபோல இருக்கிறார் தம்பி! மலேபோல! கண்டதில்லே என்கிறாய். நான் என்னத்தைச் சொல்ல!!

சொக்கப்பனிடம் பட்ட கடனை ஏன் திருப்பித்தர முடியவில்லை என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும்; மற்றவை பிறகு எளிதாகப் புரியும்.

சொக்கப்பனிடம் பட்ட கடன் விளக்கு ஆகாமல் மத்தாப்பாகிவிட்டால், வயலுக்குப் பாயாமல் விழலுக்குச் சென்றுவிட்டால், பணம் வீணாகிப்போகும்—பயன் கிடைக்காது. பயன் கிடைத்தாலல்லவா, கடனைத் திருப்பிச் செலுத்த முடியும்? கலியாணச் செலவுக்காகக் கடன் வாங்கிக் கொண்டு வந்து அதனைக் கழனி வாங்கச் செலவிட்டால், இரண்டோர் வருடத்தில் பட்ட கடனையும் தீர்த்துவிடலாம், கடன் படாமல் கலியாணத்தையும் பிறகு நடத்திக்கொள்ளலாம். அவ்விதமின்றி, கலியாணச் செலவுக்காகப் பெற்றுவந்த கடன் தொகையைக் கொண்டு காவடித் திருவிழா நடத்திவிட்டால், கலியாணந்தான் நடக்குமா, பட்ட கடனைத் தீர்க்கத்தான வழி கிடைக்குமா! கந்தன் அருள் கிடைக்கலாம்; அங்கே! மேலே!! இங்கே? கடன் கொடுத்தவன் 'பிடிவாரண்டு' அல்லவா அனுப்புவான்.

கடன் படுவது என்பதே அடியோடு தவறு அல்ல; தேவை, நேரம் இவைகளைப் பொருத்துக் கடன்படலாம்; அதனைகொண்டு தக்க பலன் கொடுக்கக்கூடிய செயலாற்றி, வருவாய்பெற்று, அதிலே மிச்சமபிடித்து, பட்டகடனையும் தீர்த்துவிடலாம், புதிய உடமையையும் காணலாம். காண்கின்றனர், கருதுதுடன் காரியமாற்றுபவர். கடனோடு கடன கருதப்பொடி பலம் பத்து-என்பார்கள் கொச்சை மொழியில், அதுபோல கடன பட்டுப்பட்டு, கவைக்குதவாத காரியத்தில் செலவிட்டுவிட்டால், சொகைப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சோணசலதைத தேடவேண்டியதுதான்! இதுவே தவறு, மோசம். நான் சொல்வது இதனைவிட விசிதிரம், சொகைப்பனிடம பட்ட கடனைத் தீர்க்க சொக்கப்பனிடமே கடன் வாங்குவது!

பருவச் சேட்டைமிகுந்த அரும்பு மீசைக்காரன் 'ஐயா' வைத்து விட்டுப்போன அறுபது வேலி நிலததைக் காட்டி பத்து ஆயிரம தான் கடன் வாங்குகிறான்முதலில். வட்டி வளருகிறது, கேட்டனுப்புகிறார்கள்; மீண்டும் அதே புள்ளியிடம மற்றுமோர் கடன் வாங்கி, பழைய கடனுக்கான வட்டியைச செலுத்துகிறான்! செலுத்துகிறான்!! அந்தப் புள்ளியே, புதிய கடன் கொடுக்கும்போது, பழய கடனுககான வட்டித தொகையை எடுத்துககொண்டு மிச்சத்தைதான கொடுக்கிறார்.

கடைசியில் என்ன நிலை? இன்னும் இருப்பது என்ன? அந்த அரும்புமீசை மட்டுந்தான் என்று ஊரார் கேலி பேசும் நிலை.

நான் இந்த 'உல்லாச புருஷனை' அல்ல, காணச் சொல்லிக் கேட்டுக்கொண்டது. இந்தியப்பேரரசு, நம்ம மாநிலஅரசு, இவைகளையே பாருங்கள் என்று கேட்டுக்கொளகிறேன்.



காங்கிரஸ் அரசு, சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சொக்கப்பனிடமே மறுபடியும் கடன் வாங்குவது போன்ற நிலையிலேதான் நடத்தப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் பட்ட கடனைத் தீர்க்க மறுபடியும் அமெரிக்காவிடமே கடன் வாங்கும் விந்தை நடந்தபடி இருக்கிறது.

நிலையில் இதேதான் மாநில அரசு! பேரரசிடம் பட்டுள்ள கடனைத் திருப்பித்தர, மாநில அரசுகள் மறு படியும் பேரரசிடமே கடன் வாங்குகின்றன.

பேரரசிடம், மாநில அரசுகள் பட்டுள்ள கடன் தொகையில், 1965-66-ம் ஆண்டில் 274-கோடி ரூபாய் திருப்பித் தரவேண்டும்—தவணை முறைப்படி.

மாநில அரசுகள் பேரரசிடம் பட்ட கடன் தொகை யைக் கொண்டு பயன்தரும் விதமாகச் செலவிட்டிருந் தால், பட்ட கடனைத் தவணை முறையிலே திருப்பித் தருவதற்கான வருவாய் கிடைத்திருக்கும். வருவாய் அந்த முறையில் கிடைக்கவில்லை.

எந்தப் பிரச்சினையையும் ஆராயும் போக்குடைய வரும், காங்கிரஸ் கட்சியினருமான திரு. சந்தானம் மாநில அரசுகள் பெற்றுள்ள கடன் தொகையில் பாதிக்குமேல், பயன் தராதவிதமாக, வருவாய் கிடைக்க முடியாத காரியங்களுக்காகச் செலவிட்டு விட்டதாகக் கூறுகிறார்.

நாம் கூறினால், அது பக்தவத்சலனாரின் அதி அற்புதமான மூளையைக் குழப்பிவிட்டுவிடுகிறது; ஆட்சி யைக் கைப்பற்ற, எம்மை விரட்ட சூழ்ச்சி நடக்கிறது என்கிறார். இது சந்தானம் சொன்னது; எதிர்க் கட்சிக்காரர் பேச்சு அல்ல. எனவே எரிச்சல் எழத் தேவையில்லை.

வருவாய் கிடைக்கும் விதமாகக் கடன் தொகை யைச் செலவழிக்காததால், 1965-66ல் செலுத்த வேண்டியுள்ள தவணைத் தொகையான 274-கோடி ரூபாய்க்கு வழி தெரியவில்லை மாநில அரசுகளுக்கு. என்னதான் செய்கிறார்கள்? சொக்கப்பனிடம் பட்ட கடனைத் திருப்பித் தர சொக்கப்பனிடமே மீண்டும் கடன் வாங்குகிறார்கள்.

274-கோடி என்றேனே, இது அசல் தொகை யில் ஒரு பகுதி.

இத்துடன் வட்டியும் கட்டவேண்டுமே! அதற்காக 135-கோடி ரூபாய் தேவை. மொத்தத்தேவை இந்த ஆண்டுக்கு 409-கோடி ரூபாய்.

இதற்காக பேரரசிடம் மாநில அரசுகள் மீண்டும் 703-கோடி ரூபாய் கடன் வாங்குகிறார்கள். அந்தக் கடன் தொகையிலிருந்து, பழயகடனுக்காக 409-கோடி ரூபாயைக் கட்டப்போகிறார்கள்!

இதுபோலவே பேரரசு கதர்த்தொழில் அமைப் புக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள். அந்த அமைப்பும் 34-கோடி ரூபாய் தரவேண்டும்! அதற்காக, பேரரசு புதியகடன் கொடுக்கிறார்கள் அந்த அமைப் புக்கு! அந்தப் புதிய கடனைக்கொண்டு பழயகடனை அடைக்கப்போகிறது கதர் அமைப்பு!

இதற்கெல்லாம் பேரரசுக்குத் தொகை வேண் டுமே! அதற்கு வழி? பாடுபட்டுக் குவித்துள்ள வருவாயி லிருந்து எடுத்து வழங்கப் போகிறதா? இல்லை! இல்லை! அப்படி இருந்திருந்தால், பேரரசு, மாநில அரசுகளைத் தட்டிக் கேட்காதா; பட்ட கடனைக்கூடத் திருப்பித் தர முடியாமல் புதுக் கடன் கேட்டுக்கொண்டிருக்கலாமா! இது உருப்பட வழியாகுமா? என்றெல்லாம். பேரரசு பட்டுள்ள கடன் தொகையைக்கொண்டு தக்கவருவாய் தேடிக்கொள்ளாததால் 1965—66 ஆண்டிலே மட்டும், இந்தியாவுக்கு உதவி செய்யும் கழகத்திடம் புதிதாகக் கடன் கேட்டிருக்கிறது, 560 கோடி ரூபாய்!!

மேலேயும் சரி, கீழ்மட்டத்திலும் சரி, ஒரே முறை; சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சொக்கப்ப னிடமே புதிய கடன் பெறுகிறமுறை.

இது நல்லதல்ல என்கிறார்கள் நிபுணர்கள்! இது கேவலம் என்கிறார் விஜயலட்சுமி பண்டிட்! இதைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள் பலர்; பொருளாதார நிபுணர்கள்; பொறுப்புள்ள அதிகாரிகளாக இருந்தவர் கள்!

ஒரே ஒருவர் மட்டும், இதைப்பற்றிக் கவலை இல்லை என்று கூறுகிறார்; காமராஜர்!

சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சொக்கப் பனிடம் புதுக்கடன் வாங்குவது, நிலைமை எவ்வளவு மோசமாகி இருக்கிறது என்பதைக் காட்டுகிறது; காமராஜரோ, கவலை இல்லை என்று கூறுகிறார்.

சொக்கப்பனிடம் கடன்பட்டவர் எத்தப்பனாக இருந்தால், கொடுத்தவனுக்குத்தான் கவலை, வாங்கிய வனுக்கு அல்ல! ஆனால் இந்தியப் பேரரசு எத்தப்பனாக முடியுமா! கொடுத்த கடனைத் திருப்பிப் பெற, கடன் கொடுத்தவன் எதை எதைத் தன்னிடம் ஒப்படைக்கச் சொல்லிக் கேட்பானோ என்ற அச்சமே வந்துவிட்டிருக் கிறது, பலருக்கு.

அமெரிக்காவிலிருந்து P. L, 480 என்ற சட்டப்படி இந்தியா பெற்றுள்ள பொருளுக்கான பணம், ரூபா யாகத் தரப்பட்டு அந்தத் தொகை இந்தியாவில் அமெ ரிக்காவின் கணக்கில் குவிந்துகொண்டு வந்திருக் கிறது.

இன்னும் கொஞ்ச காலத்தில் அமெரிக்கா இந்தியா வில் சேர்த்துவைத்துள்ள தொகை ஆயிரம் கோடி ரூபாயாகிவிடுமாம்! இப்போது 800 கோடிக்கு மேல் இருக்கிறதாம்.

இந்தத் தொகையை அமெரிக்கா இந்தியா விலேயேதான் செலவிட வேண்டும் — அது நிபந்தனை.

அமெரிக்கா, வேறு சில வெளிநாடுகளுக்குத் தருவ தாக ஒப்புக்கொண்டுள்ள பொருளை, இந்தியாவில் குவிந்துள்ள பணத்தைக் கொண்டு இந்தியாவிலே வாங்கி, அந்த வெளிநாடுகளுக்கு அனுப்பினால் என்ன? பணம் பாசி பிடித்துப்போகும் நிலையில் இருக்கிறதே! இந்தவிதமாகப் பயன்படுத்திக்கொண்டால் என்ன? என்ற பேச்சு அமெரிக்காவில் கிளம்பிவிட்டது. இதற்கு இந்தியப் பேரரசு இணங்கவில்லை. அமெரிக்க அரசு வற்புறுத்தவில்லை. இப்போதைக்கு! இந்தக் கருத்து அமெரிக்காவில் வலுப்பெற்றால், நிலைமை எப்படி மாற நேரிடும் என்பது பற்றிக் கூறுவதற்கில்லை; ஆனால் நினைக்கும்போதே நடுக்கமெடுக்கிறது—விவரமறிந்தவர் களுக்கு.

அமெரிக்காவுக்குச் சொந்தமாகியுள்ள இந்தப் பெரிய தொகையைக் கொண்டு, இங்கே உள்ள

பொருளை வாங்கி வெளிநாடுகளுக்கு அமெரிக்கா தன் கணக்கிலே அனுப்பினால் என்ன நேரிடுமென்றால், அந்த நாடுகளுக்கு அந்தப் பொருளை இந்தியா அனுப்பினால் இந்தியாவுக்குக் கிடைக்கக்கூடிய வெளிநாட்டுச் செலாவணி குறைந்துபோகும்; குறைந்துபோனால், வெளிநாடுகளிலிருந்து இந்தியா வரவழைக்கும் பொருளுக்காகப் பணம் செலுத்த முடியாத திண்டாட்டம் இந்தியாவுக்கு ஏற்பட்டுவிடும். இந்த நிலையைப் பயங்கரமானது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். இத்தகைய சிக்கல்கள் பல முளைத்தபடி உள்ளன.

ஆனால் எதற்கும் அஞ்சாமல் சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சொக்கப்பனிடமே புதிதாகக் கடன் வாங்கும் விந்தைச் செயலில் ஈடுபட்டபடி இருக்கிறார்கள்; எதிர்காலத்தை இடருள்ளதாக்கியபடி உள்ளனர்; மெத்தத் திறமையுடன்.

கடன் கொடுக்கும் நாடுகளுக்கு ஏற்படாத கவலை உங்களுக்கு ஏன் ஏற்படவேண்டும் என்று கேட்பவர்கள் உயர்ந்த இடத்திலே இருந்துவிடுவதனாலேயே அந்தப் பேச்சு உயர்ந்ததாகிவிடாது; ஊர்மெச்ச வாழ்பவர்களின் பேச்சுக்கு எதிர்ப்புப்பேசி ஏன் வம்பை விலைக்கு வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் விவரம் தெரிந்த பலர் அந்தப் பேச்சு அறிவற்றது என்பதனை எடுத்துக் கூறுமளவிருக்கிறார்கள்.

இன்று உலகிலே அமைந்துள்ள இருபெரும் போட்டி முகாம்கள், அமெரிக்காவும்—ரஷியாவும் என்பது அனைவருக்கும் தெரியும்.

வளர்ச்சி பெறுத, புதிதாக விடுதலை பெற்ற நாடுகளை, தத்தமது முகாமுக்கு அழைத்துக்கொள்ள, அமெரிக்கா — ரஷியா எனும் இருபெரு அரசுகளும் போட்டி போட்டுக்கொண்டு கடன் தருவது, இனம் வழங்குவது, தொழில்நுட்ப அறிவு அளிப்பது, கூட்டுத் தொழில் அமைப்பது என்பவைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

இந்தியப் பேரரசு, இந்த இருமுகாம்களில் எதிலும் சேராத 'நடுநிலை'க் கொள்கையைக் கொண்டது.

ஆனால் இந்தியப்பேரரசு, இந்த இரு முகாம்களிலும் தாராளமாகவும் ஏராளமாகவும் கடன் வாங்கியபடி இருக்கிறது.

இன்று இந்த இரு முகாம்களும், முகத்தைச் சுளிக்காமல், கேட்ட கடனைக் கொடுத்தபடி உள்ளன.

ஆனால், பெற்ற கடனை எப்படியும் திருப்பித் தர வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியின்படி, பணத்தைச் செலவிட்டு, தொழிலைப் பெருக்கி, வருவாய் கிடைக்கும் விதமாகப் பேரரசு நடந்துகொள்ளவில்லை.

மேலும் மேலும் கடன் வாங்கியே காலந்தள்ள வேண்டிய நிலையிலேதான் நாடு இருந்து வருகிறது.

அரசியல் பொது அறிவும் பொருளாதாரத்துறை நுண்ணறிவும் கொண்ட சமுதாயம் இந்தப் போக்கை, அபாயம் நிறைந்தது என்று கண்டிக்கவும் இந்த நிலைமைக்குக் காரணமாக இருந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் கட்சியின் ஆதிக்கத்தை அகற்றவும் தயங்காது.

இன்று நமது நாட்டிலே அந்த நிலையில், சமுதாயம் இல்லை. சர்க்கார் பட்ட கடன் என்றால் அது ஏதோ மக்களுக்குச் சம்மந்தமில்லாத ஒரு தனி விஷயம் என்று எண்ணிக் கொண்டுவிடும் மக்கள் மிகுதியாக இருக்கிறார்கள்—இன்று.

இதே நிலையில்தான் சமுதாயம் எதிர்காலத்திலும் இருக்கும் என்று எவரும் கூறிட முடியாது.

நமது கழகமும், முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட பிற அரசியல் அமைப்புகளும், மக்களிடம், உண்மை நிலையை எடுத்து விளக்கியபடி இருக்கவேண்டும். விளக்கிக்கொண்டு வருவது, உடனடியாகப் பலன் தராது போகலாம் — இடையிலே தருமபுரிகள் தோன்றலாம்—ஆனால் மெள்ள மெள்ள மெய்யறிவு சமுதாயத்தில் இடம்பெற்றே தீரும்; அப்போது இவைகளுக்கெல்லாம் மக்கள் 'கணக்கு' கேட்பார்கள்! ஜனநாயக உணர்வு வளர்ந்துள்ள நாடுகளில் சர்க்காரை நடத்தும் கட்சியிடம் இவ்விதமான 'கணக்கு களை' மக்கள் கேட்கிறார்கள்; கேட்பதால், எதிர்க்கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும், மக்களுக்குப் பயந்து, எதிர்க்கட்சிகளுக்குப் பயந்து, நீதி நியாயத்துக்குப் பயந்து நடந்துகொள்ளவேண்டி இருக்கிறது. இங்கோ, சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சொக்கப்பனிடமே மேலும் கடன் வாங்கி, வாங்கிய கடனை வகையான முறையில் செலவிட்டு வருவாயைப் பெருக்கிக்கொள்ளாமல், நடந்துகொள்ளும் ஒரு அரசு அட்டகாசம் செய்கிறது; அதனை நீக்கிட, மாற்றி அமைக்க, மக்கள் துணிந்து எழ இயலவில்லை.

கொடுப்பவர் கிடைக்கும்போது கடன் வாங்குவது எளிதான காரியம், அதிலே பெருமை இல்லை; புதிய சுமை ஏறுகிறது என்றுதான் பொருள்.

கொடுத்த கடனைத் திருப்பிச் செலுத்திவிட முடியும்; ஏனென்றால் அந்தத் தொகையைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள தொழிலில், ஆதாயம் எதிர் பார்த்த அளவு கிடைத்து வருகிறது, ஆகவே கவலை வேண்டாம் என்று கூறிடும் அரசுதான், மக்களின் நன் மதிப்பைப் பெறக்கூடிய அரசு.

இன்று வரையில், இந்தியப் பேரரசு, பெரும் பெரும் தொகையினைக் கொட்டிக் கட்டி நடத்தி வரும் தொழில் அமைப்புகள், ஆதாயம் தந்துவருகின்றனவா, என்ற சாதாரணக் கேள்விக்கு நேர்மையுடனும் நேரிடையாகவும் பதில் கூறட்டுமே பார்க்கலாம், அரசாளும் பெரிய தலைவர்கள்!

கடன் வாங்காமல் இருக்க முடியுமா என்று கேட்பதும், அமெரிக்காவே ஒரு காலத்தில் கடன் வாங்கி இருக்கிறது தெரியுமா? ரஷியாவே கடன் வாங்கி இருக்கிறது தெரியுமா? என்று கேட்பதும், புதிதாகத் தொழில் துவக்கிட, கடன் வாங்கித்தானே ஆகவேண்டும்? என்று கேட்பதும், எனக்குத் தெரியும்.

அரைத்த மாவையே அரைத்துக் காட்டாமல் நேர்மையாகவும் நேரிடையாகவும், அந்தப் பெரிய தலைவர்களைப் பதில் கூறச்சொல்லிக் கேட்டுப்பார், தம்பி! வாங்கிய கடனைக்கொண்டு பேரரசு துவக்கி நடத்தி வரும் தொழில் அமைப்புகளிலே, ஆதாயம் கிடைக்கிறதா? இல்லை என்றால், ஏன்? ஆதாயம் கிடைக்காத போது, கடனைத் திருப்பிக்கட்ட வழி ஏற்படுமா? கடனைக்கூடத் திருப்பிக் கட்டுவதற்கான வருவாயைப் பெறமுடியாத நிலையில் தொழில்களை நடத்தி வருவது, திறமைக் குறைவைத்தானே காட்டுகிறது?

இந்தத் திறமைக் குறைவு உள்ள ஒரு ஆட்சியை நடத்திவரும் கட்சியை மக்கள் எதற்காக மறுபடியும் மறுபடியும் ஆதரிக்க வேண்டும்? இந்தத் திறமைக்

குறைவு நெளியும் நிலையில் உள்ள கட்சி, நாட்டிலே வேறு எந்தக் கட்சிக்கும் நாடாளும் தகுதியும் திறமையும் கிடையாது என்று பேசுவது முறையாகுமா?

தம்பி! இந்தக் கேள்விகளுக் கெல்லாம் ஒரே பதில் தான் கிடைக்கிறது காமராஜர்களிடமிருந்து; எதிர்க் கட்சிக்காரன் பேச்சைக் கேட்காதே!! — இதுதான் பதில் பேச்சு!

சர்க்காரே நியமித்துள்ள தணிக்கைக் குழு சர்க்கார் துறையிலே உள்ள தொழில் அமைப்புகளிலே காணக் கிடக்கும், ஊழல் ஊதாரித்தனம், மந்தம் முறைகேடு, நஷ்டம் ஆகியவை பற்றிப் புட்டுப் புட்டுக் காட்டுகிறது.

எடுத்துக் காட்டுக்காக ஒரு கணக்கு

இந்தியப் பேரரசு 870 கோடி ரூபாய்களை மூலதனமாகப் போட்டு அமைத்து நடத்திவரும் தொழில் அமைப்புகளின் மூலம் கிடைத்துள்ள வருவாய், சர்க்கார் கணக்கின்படி 3 கோடியே 22 இலட்ச ரூபாய்.

போடப்பட்டுள்ள மூலதனத்துக்கு வட்டி மட்டும் எவ்வளவு தெரியுமா தம்பி! 24 கோடி ரூபாய்!

இந்த 3 கோடியே 22 இலட்ச ரூபாய் இலாபம் என்பது, வட்டி கொடுத்தான பிறகு அல்ல!! இந்த 3 கோடியே 22 இலட்ச ரூபாய் இலாபமும் எப்படிக் கிடைத்தது? தொழிற்சாலையிலே பொருளை உற்பத்திச் செய்ததன் மூலம் கிடைத்தது அல்ல. பண்டங்களை வாங்கி விற்றதிலே கிடைத்த இலாபம்.

இதைக் கண்டு பொறுப்புள்ள கட்சி வெட்கப் பட்டிருக்க வேண்டும்; பொறுப்புள்ள மக்கள் இந்த நிலைமைக்குக் காரணமாக உள்ள கட்சியை வீழ்த்தியிருக்க வேண்டும்,

பொதுப் பணத்தையும், கடனுகப் பெற்ற பணத்தையும்—ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்களை, வகையற்ற விதமாகச் செலவிட்டு, ஆதாயம்தராதவிதமாகத் தொழில் அமைப்புகள் நடத்தி, மக்களுக்கு—எதிர்காலச் சந்ததிக்கும் சேர்த்து—துரோகம் செய்திடும் ஒரு கட்சியை, வேறு எந்த நாட்டிலும், தாங்கிக்கொள்ள மாட்டார்கள், இங்கு அந்தக் கட்சியை விட்டால் வேறு வக்கு வழி இல்லை என்று கூறிடத் தக்க அளவுக்கு நிலைமை மோசமாகி வருகிறது.

அத்தகைய மோசமான நிலைமையை மாற்றி, காரிருளைக் கலைத்திடும் அறிவு ஒளியைத் தந்திடும் எழுஞாயிறுகத் திகழ்கிறது நமது கழகம்.

ஆபத்து நிரம்பிய ஒரு எதிர்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் அரசினர், சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சொக்கப்பனிடமே கடன் வாங்கும் போக்கிலே நடந்துகொள்கிறீர்களே இது முறையா சரியா என்று கேட்கும்போது, கடனைத் திருப்பிக் கட்டக்கூடிய வருவாய் பெருக வருகிறது என்ற கணக்குக் காட்டாமல், வேறு ஏதேதோ தேவையற்ற பிரச்சினைகளைப் பேசி வருகின்றனர்.

தம்பி! யாரோ சொல்லியிருப்பார்கள் போலிருக்கிறது காமராஜருக்கு; நீங்கள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராகி விட்டிருக்கிறீர்கள், ஆகவே இனிச் சற்று அதிகமாக, வெளிநாட்டுப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுங்கள் என்று. இம்முறை நடத்தினரே—என்ன பயணம்?—மின்னல் வேக சூருவளிப் பயணம்!! அதிலே வெளிநாட்டுப் பிரச்சினை பற்றியும் பேசியிருக்கிறார்.

மின்னல், நிரந்தரஒளியைத் தருவதில்லை சூருவளி நல்லதைக் கொடுப்பதில்லை; இதை உணர்ந்துதானே என்னவோ சில இதழ்கள், காமராஜரின் சுற்றுப் பயணத்தை, மின்னல் வேகச் சூருவளிப் பயணம் என்று எழுதியிருக்கின்றன. அந்தப் பயணத்தின்போதுதான் காமராஜர், ரஷியாவுடன சேருவதா, அமெரிக்காவுடன் சேருவதா என்ற பிரச்சினையைப் பற்றிக் கூடப் பேசியிருக்கிறார்,

மற்ற யாருக்கு எந்தவிதமான கருத்து இருந்து வந்தபோதிலும், தம்பி! நமது கழகம், ரஷியாவுடன் சேரவேண்டாம், அமெரிக்காவுடன் கூட்டுச் சேர வேண்டும் என்று எப்போதும் வலியுறுத்தியது இல்லை; இனியும் சொல்வதாக இல்லை.

கழகம் கூறுவதெல்லாம். எந்த இடத்திலிருந்து பெறுகிற கடனுக இருந்தாலும்—கடன் கடன்தான் என்பதும், அந்தக் கடனை, வருவாய் தரத்தக்க விதமாகச் செலவிட்டுத் தொழில் அமைப்புகளைக் காணவேண்டும் என்பதும்,

இதிலே இன்றுவரை, இந்தியப் பேரரசு, வருந்தத்தக்க, கண்டிக்கத்தக்க, தோல்விகளைத்தான் பெற்றளித்து இருக்கிறது என்பதும்,

இதன் காரணமாக இந்தத் தலைமுறை மட்டுமல்லாமல், வருகின்ற தலைமுறைக்கும், பெருஞ்சுமை ஏறிவிட்டிருக்கிறது என்பதும்,

இத்தனை கேட்டிறுக்கும் காரணமாக உள்ள காங்கிரஸ் கட்சியிடம் மீண்டும் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஒப்புவிப்பது, தவறு என்பதும், ஆகிய இவைகளை.

அமெரிக்கா, நமக்குச் சரியானபடி மதிப்பளித்து பரிவுகாட்டி, நியாயம்காட்டி நடந்துகொள்ளவில்லை; ரஷியா அவ்விதம் இல்லை; நமக்காகப் பரிந்துபேசி வருகிறது, ஆகவேதான் லால்பகதூர் ரஷியா போகிறார் என்கிறார் காமராஜர்.

இவ்விதம் லால்பகதூர் பேசமாட்டார்.

இனி என்றென்றும் லால்பகதூர், அமெரிக்கா போகவே கூடாது என்று முடிவு எடுத்துவிடவில்லை.

இனி என்றென்றும் எந்தவிதமான உதவியும் அமெரிக்காவிடமிருந்து நமக்குத் தேவையே இல்லை என்று லால்பகதூர் அறிவித்துவிடவில்லை.

வெட்கப்படாமல் உண்மையை ஒப்புக்கொள்வதானால், லால்பகதூர் அமெரிக்கா போகாமல் ரஷியா சென்றதற்குக் காரணம், இபோது இங்கே வரவேண்டாம் என்று அமெரிக்கத் தலைவர் ஜான்சன் சொன்னதுதான்.

காமராஜரின் 'கண்டுபிடிப்பு' வேறு!!

அவருடைய அந்தப் பேச்சு ஆங்கில ஏடுகளில் எடுப்பான முறையிலே வெளியிடப்பட்டாலேபோதும், அவருக்கும் சங்கடம் ஏற்படும், இந்தியப் பேரரசுக்கும் சங்கடம் விளையக்கூடும்.

நல்ல வேளையாக இங்கே பேசினார், தமிழில்! இப்படியா பேசினீர்கள் என்று யாரேனும், டில்லி வட்டாரத்திலே கேட்டால், உடனே, நான் பேசியது அவ்விதம் அல்ல; பத்திரிகைக்காரர்கள் திருத்திப் போட்டுவிட்டார்கள் என்று கூறிடத் தெரியும் காமராஜருக்கு. முனபு ஒரே அடியாக அடித்தாரல்லவா, இந்தியிலே அறிக்கை வந்தால், கிழித்துப் போடுவோம் என்று நான் சொல்லவே இல்லை என்று; வடக்கே உள்ளவர்கள் கேட்டபோது! அதுபோல!!

இப்போதுள்ள பிரச்சினை, இந்தியா ரஷியாவிடம் நேசமாக இருப்பதா, அமெரிக்காவுடன் நட்பாக இருப்பதா என்பது அல்ல.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்சன், இப்போது இங்கே வரவேண்டாம் என்று கூறியது, பொறுத்துக்கொள்ளக்கூடியதுமல்ல, மறந்துவிடத்தக்கதுமல்ல; அந்தப் பேச்சு ஜான்சனுடைய தரத்தையே வெகுவாகக் குறைத்துவிட்டிருக்கிறது என்பதையும் நான் மறுப்பவனல்ல.

ஆனால் தம்பி! காமராஜர் பேசியதில் இருந்து, இனி அமெரிக்காவின் உதவி கேட்டிட இந்தியப் பேரரசு விரும்பாது என்று மட்டும் யாரும் எண்ணிக்கொள்ள வேண்டாம். அவருக்கேகூட அந்த எண்ணம் ஏற்பட்டுவிடக்கூடாது. சுற்றுவளிப் பயணத்தின் காரணமாக, அவர் நிலைமையை மறந்துவிட்டுப் பேசியிருக்கிறார்.

அவர் அத்தனை வீராவேசமாக இங்கே பேசிக்கொண்டிருந்த நாளில், அமெரிக்காவில், உதவி கேட்டுக்கொண்டு, உருக்கமாக ஒரு மேத்தா பேசிக்கொண்டிருந்தார்.

ஆமாம், தம்பி! அசோக்மேத்தா, இந்தியாவுக்கு உதவி, தாராளமாகவும் ஏராளமாகவும் செய்யும்படி ரஷியாவில் பேசிக்கொண்டிருக்கும் அதே நாட்களில், இந்தியாவுக்கு அதிக அளவில் உதவிசெய்யும்படி, மற்றொரு மேத்தா, — ஜி. எல். மேத்தா—அமெரிக்காவில் பேசிக்கொண்டிருந்தார்.

மே திங்கள் 11, 12 நாளிதழ்களைப் பார்த்தால், இரு வேறு நாடுகளில் இருவேறு மேத்தாக்கள் இந்தியாவுக்கு உதவி அளிக்கும்படி உருக்கத்துடன் வேண்டிக் கொண்ட செய்திகளைக் காணலாம்.

அதே இதழ்களில் மின்னல் வேகச் சுற்றுவளியார், அமெரிக்காவைத் தூக்கி ஆறுகாததூரம் வீசிப்போட்டுவிட்டு, சோவியத் ரஷியாவுடன் சரசமாடிடும் விந்தைப் பேச்சுப் பேசியதையும் காணலாம்.

இவைகளுக்குள் உள்ள முரண்பாடுகளை இங்கு உள்ள மக்கள் அவ்வளவாகக் கவனிக்கமாட்டார்கள்; அவர்களில் மிகப்பலர் இன்னமும் அண்டத்தை ஆதிசேஷன் தாங்குகிறார் என்பதையும், அரிபரந்தாமன் திருப்பாற்கடலில் ஆலிலைமீது பள்ளிகொண்டிருக்கிறார் என்பதையும் 'இருந்தாலும் இருக்கும்' என்று ஏற்றுக் கொண்டுள்ளவர்கள்!

ஆனால் விவரம் தெரிந்தவர்கள், விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

நான், தம்பி! அந்த முரண்பாடுபற்றிக்கூட இப்போது குறிப்பிடவில்லை; நான் கேட்பதெல்லாம், கடன் சுமை ஏறிகொண்டே வருகிறதே, கடனைத் திருப்பிக் கொடுத்திடத்தக்க முறையில், வருவாய்தரும் தொழில் அமைப்பு ஏற்படவில்லையே, இதற்கு இன்று அரசாளும் காங்கிரசார், என்ன சமாதானம் கூறுகிறார்கள் என்பதுதான்.

தம்பி! சர்க்காரிடம் பெற்ற கடன் மட்டுமல்ல; ஏராளமான வெளிநாட்டு முதலாளிகள். குறிப்பாக அமெரிக்க முதலாளிகள். முதல் போட்டு இங்கே தொழில் நடத்தி, இலாபத்தைக் கோடிக்கணக்கில் தத்தமது நாடுகளுக்குக் கொண்டுசெல்கிறார்கள். இங்குள்ள 'முதலாளிகளுடன்' கூட்டு சேர்ந்து தொழில் நடத்துகிறார்கள்; இலாபம் குவித்தபடி இருக்கிறார்கள்.

இவை யாவும் எதிர்காலத்தில், இந்த நாட்டின் பொருளாதார யந்திரத்தின் சூத்திரதாரிகளாக வெளி நாட்டார்களே ஆகிவிட்டுள்ளனர் என்ற பேராபத்தை மூட்டிவிடலாம்.

இப்போதே, சுயராஜ்யத்துக்கு முன்பு இருந்ததை விட, மிக அதிகமான அளவு, பிரிட்டிஷ் அமெரிக்க முதலாளிமார்களின் ஆதிக்கம் இங்கு வளர்ந்துவிட்டிருக்கிறது. இதனைக் காங்கிரஸ் தலைவர்கள் மறுத்திட முடியாது.

கடனும் நிரம்ப வாங்கி இருக்கிறார்கள்; பெரிய பெரிய தொழில்களிலும் வெளிநாட்டாரின் பிடி அதிகமாகி வந்திருக்கிறது, இந்தியப் பேரரசு துவக்கி நடத்திவரும் தொழில்களில், மகிழத்தக்க வருவாய் கிடைக்கவில்லை; ஊழல் ஊதாரித்தனம் காரணமாகப் பலஅமைப்புகளிலே நட்டம் தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது,

இவை, பெருமை தரத்தக்கவைகளா?

பாருங்கள் எமது ஆட்சித் திறமையை என்று கூறி, காங்கிரஸ் தலைவர்கள் மார்தட்டிக் கொள்ளத் தக்கவையா?

இவற்றைச் செய்திடும் ஒரு கட்சி, மக்களின் ஆதரவைப் பெறுவதற்கேற்ற தகுதியைக் கொண்டது தானா?

இந்தக் கேள்விகள் இன்று பெரும்பாலான மக்களின் மனதைக் குடையாமலிருக்கலாம்; ஆனால் மக்கள் இவை பற்றி என்றைக்குமேவா சிந்திக்க மாட்டார்கள்?

தம்பி! மக்களை இந்த விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கச் செய்யவேண்டிய பொறுப்பைத்தான் கழகம் மேற்கொண்டிருக்கிறது; அதனைத் தக்க முறையில் நடத்திக்கொண்டும் வருகிறது.

எனவேதான் காமராஜர், மாதத்தில் இருபது நாட்கள் நான் தமிழ் நாட்டிலே சுற்றுப் பயணம் செய்யப்போகிறேன் என்று அறிவிக்கிறார்

இதைவிடப் பெருமை தரத்தக்க 'சான்று' வேறு தேவையில்லை, நமது கழகத்துக்கு.

நாக நாட்டுப் பிரச்சினை, பாஞ்சாலச் சிக்கல், மத்தியப் பிரதேசத்து மாச்சரியம், உத்திரப்பிரதேசத்து உபத்திரவம், ஒரிசா ஊழல், மைசூர் மனத்தாங்கல், பாகிஸ்தான் பகை, சீனாவின் தாக்குதல் எனும் இன்னோரன்ன எல்லாப் பிரச்சினைகளுக்கும் பத்தே நாள்; நமது

கழகம் ஏற்படுத்தி வைத்துள்ள எழுச்சியை, மக்களின் விழிப்புணர்ச்சியை அழிததிடும் முயற்சிக்கு இருபது நாள்!

அவ்வளவு வேலை இருப்பதாக உணருகிறாரே காமராஜர், ஒப்புக்கொள்கிறாரே மறைமுகமாக, அது போதும், நமக்கு நமது பணியின் தரத்திலும் அளவிலும் பெருமை இருக்கிறது, பலன் இருக்கிறது என்பதை உணர்த்த.

அகில இந்தியாவுக்கும் சேர்த்து அவர் தலைவர்!! ஆமாம், தம்பி! ஆனால், அவர், மாதத்தில் இருபது நாள் இங்கு இருந்தாக வேண்டும் என்று நிலைமை!!

தருமபுரியில் வெற்றி பெற்றதனால், வேறு சில தலைவர்கள், கழகம் செல்வாக்கு இழந்துவிட்டது, காங்கிரசுக்குச் செல்வாக்கு அதிகமாகி விட்டது என்று தப்புக் கணக்குப் போடுகிறார்கள்; காமராஜருக்குத் தெரிகிறது, தருமபுரிவெற்றியைக் கொண்டு கணக்குப் போட்டு ஏமாறக்கூடாது என்று; ஆகவேதான், மாதத்தில் இருபது நாள் இங்கு!!

மாதத்தில் இருபது நாள் காமராஜர், மின்னல் வேகச் சூறாவளிச் சுற்றுப் பயணம் நடத்தி, மக்களிடம் கழகம் ஏற்படுதது வைத்துள்ள எழுச்சியை மாய்த்திடும் முயற்சியில் ஈடுபட வேண்டி ஏற்பட்டுவிட்டிருக்கிறது. இது என்னைப் பொருத்தவரையில், தம்பி! ஒரு இனிப்பளிக்கும் நிகழ்ச்சியாகவே தோன்றுகிறது.

காமராஜருக்கு நிரம்ப வேலை தர, கழகம் களிப்புடன் காத்துக்கொண்டிருக்கிறது.

ஆனால் ஒன்று. கழகம் எழுப்பிடும் பிரச்சினைகளை நேர்மையாகவும் நேரிடையாகவும் சந்தித்து, தக்க விளக்கம் தரவேண்டும காமராஜர். சுற்றி வளைத்துப் பேசுவது, சூடம் கொளுத்திப் பூஜை செட்வோர்களின் புன்னகையைப் பெற்றிடப் போதும். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவது, எடுபிடிகளின் எக்காளத்துக்குப் போதும்! அவனே! இவனே! என்று பேசுவது, பண்பு நிரம்பப் பெறவேண்டும் என்பதைமட்டுமே விளக்கிக் காட்டிடும். மக்களின் மனதிலே ஏற்பட்டுள்ள அச்சம், அய்யப்பாடு, அருவருப்பு, அலுப்பு இவைகளைப் போக்க நேர்மை வேண்டும், நேரிடையான பதில் வேண்டும், திட்டவட்டமான விளக்கம் வேண்டும்.

இதனைக் கருத்திலேகொண்டு, காமராஜர், இருபது நாட்கள் அல்ல. இருபது நிமிடம் பேசினாலும், விவரமறிந்தோர் பாராட்டுவர். குயில் நாளெல்லாம் பாடிந்தானு பாராட்டுப் பெறுகிறது; இல்லையல்லவா!!

மக்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள், ஏன் எங்கள் இன்னல் போகவில்லை,

எங்கள் இன்னலைப் போக்க தீட்டிய திட்டங்கள் ஏன் எங்களை வாழவைக்கவில்லை,

எங்களை வாழவைக்க என்று சொல்லிப் போட்ட திட்டத்தின் பலன் எப்படிச் சீமான்களிடம் சிக்கிக் கொண்டது,

அப்படிச் சீமான்களிடம் அந்தப் பலன் சிக்கிக் கொண்டதை ஏன் நீங்கள் தடுக்கவில்லை,

தடுக்காதது மட்டுமல்ல அவர்களுடன் கூடிக் குலாவி குழலூதி வருகிறீர்களே, அது ஏன்,

அது மட்டுமல்லாமல், அந்த அக்ரமக்காரர்களிடமிருந்து, கட்சிக்காகக் கோடி கோடியாகப் பறித்துக் கொள்கிறீர்களே அது முறையா?

அப்படிப் பறித்துக்கொண்டு பிழைத்து வரும் நீங்கள், சோஷியலிசம் பேசுகிறீர்களே, அது உண்மையாக இருக்க முடியுமா?

ஊர்க்குடி கெடுப்பவனை உறவினனுக்கிக்கொண்டு ஊர் வாழ வகுக்கப்பட்ட சோஷியலிசத்தை நடத்திக் காட்ட முடியுமா? இவை போன்றவைகளை.

அவனுக்கு என்ன தெரியும்! இவனுக்கு என்ன முடியும்! எல்லாம் எனக்குத் தெரியும்! எதுவும் என்னால்தான் முடியும்!!—என்ற இந்த முறையில், இருபது நாட்களா, முப்பது நாட்கள் பேசினாலும், மக்களிடம் நன்மதிப்பும் பெறமுடியாது, கட்சியின் எதிர்காலத்தையும் செம்மைப்படுத்திக்கொள்ள முடியாது.

இப்போது நடைபெற்று முடிந்த சூறாவளிபோலத்தான் மேலும் பல சூறாவளிகள் நடக்கும், அதுதான் மாதத்தில் இருபது நாட்களுக்கு என்றால், மேளதாளம், தீவட்டி மத்தாப்பு, கோச்சு மோட்டார், பூக்கடை பழக்கடை, மூங்கில் துணிமணி, ஒலிபெருக்கி அச்சகம், இவைகளுக்கு வருவாயும், பல செல்வவான்களுக்குச் செலவும், மக்களுக்கு நேரக்கேடும் ஏற்பட முடியுமே தவிர, வேறு உருப்படியான பலன் ஏற்படாது.

காமராஜர், தாராளமாக அதைச் செய்து பார்க்கட்டும்.

மாதத்தில் இருபது நாட்கள் நான் தமிழ் நாட்டில் இருக்கப்போகிறேன் என்று அவர் சொல்லும்போதே, இந்தியப் பேரரசின் தலைவர்களின் நினைவு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதுதான் இயற்கையிலேயே செல்லும். ஏனெனில் எத்தனை கசப்பானதாக இருப்பினும், உண்மையை அவர்களும் ஒப்புக்கொண்டாக வேண்டுமே; தமிழகத்தில் பல எதிர்க்கட்சிகள் இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகம்தான் முன்னணியில் நிற்கிறது என்ற உண்மையை. ஆக காமராஜர் மாதத்தில் இருபது நாள் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்கிறார் என்றால், என்ன பொருள்கொள்ள முடியும்? திராவிட முன்னேற்றக் கழகத்தின் வலிவு அந்த அளவு இருக்கிறது என்பதைத்தானே!

உங்கள் சரக்குகளை சென்னையிலிருந்து எங்கு அனுப்பவேண்டி இருந்தாலும் எங்களுக்கு போன்மூலமோ கடிதம் மூலமோ தெரியப்படுத்துங்கள்.

ஸ்டேண்டர்டு ரோடுவேஸ்,
18, டேவிட்சன் தெரு,
சென்னை-1.
போன் நெ. **29834**

இங்கே மந்திரிகள் இருக்கிறார்கள்; தலைவர்கள் நிரம்ப! புதிதுபுதிதாக!! பேச்சாளர்கள், புதுப்புது பூச்சுகளுடன்!!-இவ்வளவு இருந்தும், 'பெரிய மேளம்' வந்தாகவேண்டும் என்ற நிலைமை! அதுவும் ஒருவேளை இரண்டு வேளைக்கு அல்ல! ஒருநாள் இரண்டு நாளைக்கு அல்ல; மாதத்தில் இருபது நாட்களுக்கு!! அவ்வளவு வேலை இருக்கிறது. இங்குள்ள காங்கிரஸ் மந்திரிகளும் தலைவர்களும், பேசுகிறார்கள்; நித்தநித்தம்; காரசாரமாக!! ஆனால் காமராஜருக்குத் திருப்தி ஏற்படவில்லை. மக்களை வசப்படுத்த இவர்களால் முடியவில்லை என்று எண்ணுகிறார்; மறைமுகமாக அதை எடுத்தும் காட்டுகிறார், காட்டிவிட்டுக் கூறுகிறார் நான் வருகிறேன்; நானே வருகிறேன்; மாதத்தில் இருபது நாள் வருகிறேன் என்று.

மாதத்தில் இருபது நாள், காங்கிரஸ் கூட்டம் நடக்கும் என்று அல்ல,

மந்திரிகளும் காங்கிரஸ் பேச்சாளர்களும் கூட்டம் நடத்துவார்கள் என்று அல்ல,

நான் வருகிறேன்!

நானே வருகிறேன்!

என்பதாகப் பேசுகிறார்.

பெரிய டாக்டரே வரப்போகிறார்; இங்கேயே தங்கி இருந்து வைத்தியம் செய்யப்போகிறார் என்பது, நோயாளியின் நிலைமை அத்தனை மோசமாகிவிட்டிருக்கிறது என்பதற்குத்தானே அடையாளம்?

அதுபோலத்தான், தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் நிலைமை, 'பெரிய டாகடர்' வந்து தீரவேண்டிய விதமாக ஆகிவிட்டிருக்கிறது.

இருபது நாட்கள் அல்ல, மாதம் முழுவதும் இங்கேயே இருந்து, பேசி வந்தாலும், ஆட்சிமுறை இன்றுள்ளதுபோல, மக்களை வாழவைக்காததாக, ஊழல் ஊதாரித்தனம் நெளிவதாக, முதலாளிகளைக் கொழுக்கவைப்பதாக, கடன் பளுவை அதிகப்படுத்துவதாக, சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சொக்கப்பனிடமே கடன் வாங்கும் முறையினதாக இருந்து வரும் வரையில்,

ஊர்க்குடி கெடுப்பவர்களும், முதலாளிகளும், கள்ளமார்க்கட்காரரும் கொள்ளை இலாபம் அடிப்பவனும், கொள்கை அறியாதவனும் பிடி ஆட்களும், பேரம் பேசிகளும் சோரம போனவர்களும், காங்கிரஸ் கட்சியின் நடுநாயகங்களாக இருந்து வரும் வரையில், மாதத்தில் இருபது நாளென்ன, முப்பதுநாளும் இங்கே முகாமடித்தாலும், பலன் என்ன கிடைத்துவிடும! பச்சைவண்ணம் பூசி, கழுகைக் கிளியாக்கிவிட முடியுமா, பளிங்குப் பாத்திரத்தில் ஊற்றித் தருவதால் காடி, பாலாகிவிடுமா?

ஒரு பலன், உருப்படியான பலன், காமராஜர் அறிவித்துள்ள திட்டத்தின்படி கிடைப்பது, கழகத்தின் வளர்ச்சியின் அளவு இந்தியப் பேரரசுக்குப் புரிகிறதே அதுதான். அந்த மகிழ்ச்சி எனக்கு!!

அரசியல் நிலைமைகளை, ஆட்சியாளர்களால் ஏற்படும் கேடுபாடுகளை மக்களிடம் எடுத்துக்கூறிவருவது மகத்தான ஜனநாயகக் கடமை. அந்தக் கடமையைச் செய்து வருகிறது கழகம்; அதனை எதிர்த்து இருபது நாள் சுற்றுப்பயணம் மட்டும் செய்து பலன் காண எண்ணுவதைவிட, ஆட்சி முறையைத் திருத்த வழி என்ன என்று யோசிக்க ஒருநாள், காங்கிரஸ் கட்சி மீது மக்கள் வெறுப்பு கொள்ளத்தக்க நிலைமையை உண்டாக்கி வைப்பவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் காங்கிரசின் செல்வாக்கைப் பயன்படுத்தித் தமது சுய நலனைப் பெருக்கிக்கொள்கிறார்களே அதனை ஒழிப்பது எப்படி என்பதற்கு ஒருநாள், உள்நாட்டு வெளிநாட்டு முதலாளிகளின் கொட்டம் வளர்ந்து வருகிறதே அதனை அடக்கிட ஒடுக்கிட வழி என்ன என்பதுபற்றி யோசிக்க ஒருநாள்; சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சொக்கப்பனிடமே மீண்டும் கடன் வாங்கும் போக்கிலே அரசு நடந்துகொள்கிறதே அதனைத் திருத்துவது எப்படி என்பதுபற்றி யோசிக்க ஒருநாள் என்ற முறையில், மிச்சமிருக்கும் பத்து நாட்களையாவது காமராஜர் பயன்படுத்தினால், நல்லது. நான் சொல்லியா அவர் கேட்பார்! ஏ! அப்பா! அவர் எவ்வளவு பெரிய உயரத்தில் இருக்கிறார்!! என் பேச்சு காதில் விழுமா!

நான் சொல்வது அவருடைய காதிலே வீழ்ந்தாலும் வீழாவிட்டாலும், தம்பி! உன் செவி வழி நுழைந்து நெஞ்சிலே நிறைந்திருந்தால், அது போதும் எனகக. அதனால்தான் உன்னிடம் சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்கக சொக்கப்பனிடமே மறுபடி கடன் வாங்கும் போககிலே காங்கிரஸ் அரசு நடந்துகொண்டு வருவது பற்றிச் சொன்னேன். பட்டம், பதவி, பர்மிட்டு லைசென்சு, இவைகளுக்காக ஏங்கிக் கிடப்பவர்கள், பதவிப் பல்லக்கினைச் சுமந்து திரிந்தால் பாகும் பருப்பும் சுவைக்கக் கிடைக்கும் என்றுநினைத்துக் காத்துக் கிடப்பவர்கள், ஐயோ! நம்மால் ஆகுமா? என்று அஞ்சிக் கிடப்பவர்கள், விளைந்த காட்டுக் குருவிகள், ஒளிவீழ்ந்து மாய்ந்திடும் விட்டில் பூச்சிகள் போன்றுரை விட்டு விட்டு உழைத்துப் பிழைப்பவர்கள், ஊருக்கு உழைப்பவர்கள், உணமையை உணரத் துடிப்பவர்கள். நீதிக்காகப்பரிந்து பேசுபவர்கள், நெருப்பாற்றைக் கடந்திடும் அஞ்சா நெஞ்சு கொண்டவர்கள் ஆகியோரிடம் இவைகளைக் கூறிடு. பெரிய பெரிய சர்வாதிகாரங்களைக்கூட, இத்தகையவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட அணிவகுப்புகள் வீழ்த்தின என்று படித்திருப்பதால், தம்பி! எனக்கு ஒரு நம்பிக்கை; அந்த நம்பிக்கையுடன் இவைபற்றிக கூறினேன். வேறு எவரிடம் கூறுவேன்?

அண்ணன்,

அண்ணாதுரை

வாடாமல்லி

து. கனிஷாயா

வாசுகி:

மல்லிகைமலர்ந்தால் மணம்வரும் என்று கூறுவார்கள். வாடாமல்லியைப் பற்றி ஒரு வழக்கு உண்டு. இந்த மலர் வாட, வாடத்தான் மணம்அதிகரிக்குமாம். நான் வாடாமல்லியை என்றுமே சூடியதில்லை. ஆனால், அதைப்பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். பூங்குடி கிராமத்துக்கு நான் செல்லும்போதெல்லாம் என் தோழி மனோன்மணி அதைப்பற்றி நிறைய சொல்லுவாள். அவள் அடிக்கடி அதைச் சூடிக் கொள்ளுவாளாம். தாயும்தந்தையும் அற்ற அவளுக்கு, அன்னையும் பிதாவுமாக இருந்துவந்தஅவள் அண்ணன் முத்து அனபோடு தன் தங்கைக்கு வாங்கி வரும் பரிசு அது. கருமைநிறக் கூந்தலுக்கு எடுப்பாகஇருக்கட்டும் என்று அந்த ஆசையை மடடும் மையமாகக்கொண்டு காகிதமானாலும் சரி—ரப்பர் ஆனாலும் சரி என்று கண்டவற்றைப் பூக்களாக மாற்றி தலையில் ஏற்றிக் கொள்ளும் நாகரிகத்துக்கு அப்பாற்பட்டு இருந்தாள் அவள். முத்து பூவாங்கிக் கொண்டு வந்தால்தான் உண்டு. இல்லையென்றால் வேறு எதையும் சூடமாட்டாள். நாகரிகம் என்ற பெயரால் கெட்டதை நல்லதாகப் பாவிக்கும் போக்கு அவளிடத்தில்இல்லை அவள் உடன்பிறந்தவன் முத்து ஒருவன்தான். பட்டாளத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த அவள் தந்தை இறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. சர்க்கார் தரும் உதவிப் பணம் ஒன்றால்தான வருமானம். பத்தாவது வரையில் படித்திருந்த போதிலும், பணி செய்ய வாய்ப்பு கிடைக்காததால் அல்லாடிக்கொண்டிருந்தான் முத்து. உள்ளூர் மணியம் மாணிக்கம் பிள்ளை நல்லவர். பரம்பரை பரம்பரையாக வந்த தம் தொழிலை நேர்மையோடு செய்து வந்தார். அவருக்கு உதவியாக இருந்த கணக்குப் பிள்ளை வயது ஆனவர். ஆகவே விலகிக்கொண்டார். முத்துவின் அடக்கமும் ஒழுங்கான நடத்தையும் மாணிக்கம் பிள்ளையின் கவனத்தை ஈர்த்தன. அதன் பலனாக முத்துவை தம்கணக்குப்பிள்ளையாக வைத்துக் கொண்டார். நிலைமைகளை உணர்ந்த முத்து அதை சமயத்தில் கிடைத்த உதவியென்றுஎண்ணி வேலையை ஏற்றுக்கொண்டான். வேலையில் வல்லவன் என்று பெயர் பெற்று மணியம், மாணிக்கம் பிள்ளையின நல்லெண்ணதைச் சுலபத்தில் பெற்றுவிட்டான்.

முத்து நல்ல எண்ணங்களும் அமைதியான போக்கும் கொண்டவன். புதுமைக் கருத்துக்களை வரவேற்கும் ஆர்வமும் புரட்சி எண்ணங்களும் அவன் உளளத்தில் முகிழ்த்து இருந்தன. சதுப்புக் காடாக இருகும சமுதாயததை மணம் கமழும் சந்தனத் தோட்டமாக்க வேண்டும் என்பது அவனது எண்ணம். வயதில் என்னைவிட மூத்தவரான அவரை நான் இனி மரியாதையோடு அழைப்பதே நலலது. முதது மொத்தத்தில் மிகவும நல்லவர், நல்ல முத்து. அவரது இதத கைய நல்ல எண்ணங்கள் மலர்ந்து மணம பரவுதல் எவ்வளவு நல்லது? இத்தகைய நலலவர் ஒருவருடன் வாழ்க்கைப் பயணம் செய்யும் பெண் எவ்வளவு பாக்கியசாலியாக இருப்பாள்?

முத்து:

வாசுகி பூங்குடி கிராமத்துக்குப் பலமுறை வந்திருக்கிறாள். என் வீட்டுக்கும் வருவாள். என்தங்கை மனோன்மணி அவளது இளவயது தோழி. இருவரும் சிறுவயதில் மண் வீடுகட்டி மரப்பாச்சி வைத்து குடித்தன விளையாட்டை விளையாடியவர்கள். இணைபிரியா சினேகிதிகள் இணைப்புக்கும், பிணைப்புக்கும் விடை கொடுப்பதுபோல; வாசுகி வளர்ந்து பெரியவள் ஆனதும், வாழ்வில் நுழைந்தாள். பணக்கார வீட்டுப் பெண் இல்லையென்றாலும், பரம ஏழை என்று சொல்லுவதற்கில்லை. அழகுக்கும் அன்பிற்கும் அவளிடத்தில் பஞ்சம் இல்லை. நாளையபொழுது எப்படிக் கழியும் என்ற ஏக்க நினைவு இல்லாமல் காலம் தள்ளக்கூடிய வசதியுள்ள வள. ஆனால், அவள் வாழ்வின் அமைப்புதான் எதிர் பாராதவிதமாக அமைந்துவிட்டது. இவளையும்விட சொத்தில் பெரியவரான அவளது தாயுமாமன் சண்முகம் பிள்ளை தனக்குப் பிள்ளையில்லாத குறையாலும், மூத்த மனைவி இறந்துவிட்ட காரணததாலும் வாசுகியை இரண்டாவது தாரமாக மணம் முடித்துக் கொண்டார். வாசுகி மறுக்கவில்லை. மனம் நோகவில்லை. தன் பெற்றோர் காட்டும் வழி அதுதான் என்பதை அறிந்துகொண்டாள். அதை மீறி நடப்பது பெண மைக்கு மாருனது என்று கருதினாள். தடை சொல்லாமல் தாய்மாமன் சணமுகம் பிளளையைக் கைப்பிடித்தாள். அன்பும் அறநெறியும் பொங்க குடும்ப வாழ்வை நடத்தினாள். பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிறகும் பெருமை தேடித் தந்தாள். இத்தனைக்கும் சண்முகம் பிள்ளைக்கும், வாசுகிக்கும் வயது வித்தியாசம் ஏறக் குறைய பதினைந்தாண்டுகள் இருக்கும். வாசுகிக்கு வசதிகளில் ஒன்றும் குறைவில்லை. வளமான வாழ்வுதான, தேவையான மட்டும் சௌகரியங்கள்தான். ஆனால், சண்முகம் பிள்ளை மட்டும் பணக்காரருக்கே உரிததான விளையாடல்களில் இருந்து தப்பவில்லை. பூனை குதிரைப்பந்தயத்தில் அவருக்கென்று ஒரு குதிரை உண்டு. அது வருடந்தோறும் தரும் லாபத்தைவிட நட்டம் அதிகம் என்றாலும் குதிரைப் பந்தயம் என்றால் அவருக்கு உயிர்போல. வருடம் தவறினாலும் தவறாவடடாலும பூனாவுக்குச் செல்லத் தவறமாட்டார். பந்தயத்தில் பங்கெடுத்துக் கொள்ளாமல் இருக்கமாட்டார். இருக்கிற ஒரு குதிரையை நம்பி சொந்த வகையில் பல குதிரைகளின்மீது பணத்தை ஏராளமாகக கட்டும் பழகக அவருக்கு இருந்தது. இழப்பைப் பற்றிக கவலைபபடாமல அளவுக்குமீறிய செலவதததைக குதிரைப் பந்தயததில் இழந்து தவிக்க ஆரம்பிததார். கடைசியில் கையில் இருந்த பணம் எல்லாம் பறந்து போய்விடவும் பூனா பந்தயக் குதிரையையும் விற்றுவிட்டார். வாசுகி இதற்கெல்லாம கவலைபபடவில்லை. தடை சொல்லுவதும இலலை. வருமானம் தந்த குதிரையும், இருப்பில் இருந்த செல்வமும தனனை வடடுப் போனதும் சணமுகம பிள்ளை செயவதறியாது திகைத்தார். வசதி இருந்தபோது வளமான வாழ்வை நடத்திய அவர், அது குறைந்தபோது அந்த வளைவு நெளிவுகளைத் தம்மால் சமாளிக்க முடியாமல் தவித்தார். இந்த வேத

னையில் உள்ளமும் உடலும் நோக, அதே வேதனையால் ஓராண்டுக்குள் இந்த மண்ணிலிருந்தும் விடை பெற்றுக்கொண்டார். பாவம் வாசுகி அவள் கண்ணற்ற ஓவியமாய், கைம்பெண்ணுய்ச் சுமை நிறைந்த வாழ்வை மேற்கொண்டாள். இனிப்பு கசப்பாக மாறிய சூழ்நிலையில் இன்னலுக்குத் தன்னை ஒப்புவித்துவிட்டு நாட்களை எண்ண வேண்டியவளாகி விட்டாள். சமுதாயத்தில் அவளுக்கென்று தனியிடம் ஒதுக்கப்படும். இத்தனை நாட்கள் ஒண்டிவாழ்ந்த அவள் இனி ஒதுக்கப்பட வேண்டிய பொருளாகிவிட்டாள்.

மனேன்மணி

அண்ணன், வாசுகியை இப்போதுதானே முதல் தடவையாகப் பார்க்கிறான்? எத்தனையோ தடவை அவள் இங்கே வந்திருக்கிறாள். பேசியிருக்கிறாள் என்னோடுகூட சாப்பிடவும் இருக்கிறாள். அப்போதெல்லாம் குனிந்த தலையை நிமிர்த்தாத அண்ணன் இபோது, வாசுகி வந்தால் வெளியேகூடப் போவதில்லையே! அவள் என்னோடு பேசுவதை, உறவாடுவதை — ஒவ்வொரு செய்கையையும் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்து விட்டானே! முன்பெல்லாம் கூப்பிட்டாலும் வரமாட்டானே. இப்போது "கூப்பிட்டாயா மனேன்மணி! என்று தானுகக் கேட்டுக்கொண்டே நாங்கள் உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு வருகிறான், அவன் வருகையைக் கண்டதும் எழுந்திருக்க முயலும் வாசுகியையும் உட்காரும்படி சொல்கிறான். அவன் வார்த்தைகளில் இப்போது வாஞ்சை இருக்கிறது. அவள் சாப்பிட்டாளா இல்லையா என்பதை அக்கறையோடு விசாரிக்கிறான். அவள் நலனைப்பற்றி அவளிடம்தான் கேட்கவில்லையே தவிர, என்மூலமாக அதைவிடப் பத்துமடங்கு அதிகம் கேட்டுத் தெரிந்துகொள்கிறான். அவள் நலனைப்பற்றி இவ்வளவு அக்கறை காட்டியதே இல்லை இதுகாறும். வாசுகியின் போக்கிலும் எனக்கு மாறுதல் தெரியத்தான் செய்கிறது. அவள் என் வீட்டுக்கு வருவது முன்பைவிட அதிகமாகத்தான் இருக்கிறது. அடிக்கடி வர ஆரம்பித்துவிட்டாள். அண்ணனைப்பற்றியும் அக்கறையோடு விசாரிக்க ஆரம்பித்துவிட்டாள். சில சமயங்களில் பதில் கூறவும் எனகுச் சங்கடமாக இருக்கிறது. அவ்வளவுதூரம் என்னைத் துருவித்துருவி கேட்க ஆரம்பித்துவிடுகிறாள். நான் என்ன செய்யட்டும்? இயந்திரம்போல பதில் சொல்கிறேன். அவள் கனிவும், பரிவும் ஏன் என்று எனக்குப் புரியவில்லை. அன்று ஒருநாள் நான் கோயிலுக்குப் போயிருந்தேன். அந்த சமயம் அவள் வீட்டுக்கு வந்தாள். அண்ணன் மட்டும் தனியேதான் வீட்டில் இருந்தான். அவன் வீட்டு முன் அறையில் உட்கார்ந்துகொண்டிருக்க, நான் சற்றும் எதிர்பாராத விதமாக அந்த அறையினின்று வெளியே வந்தாள் வாசுகி. எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. அவள் வந்திருப்பது எனக்குத் தெரிந்திருந்தால் சற்று நிதானித்து வெளியே நின்று என்ன பேசியிருப்பாள் என்பதையாவது கேட்டிருப்பேன். எனக்கு எப்படி தெரியும் அவள் வந்திருப்பாள் என்று ஜாடைமாடையாக அண்ணனைக் கேட்டேன். அவன் ஒன்றும் தெளிவாகக் கூறவில்லை. வெட்ட வெளிச்சமாக எதுவும் கூறாமல் மழுப்பிவிட்டுப் போய் விடுகிறான். என் உள்ளம் ஒருபுறத்தில் வேதனையாலும், மறுபுறத்தில் அச்சத்தாலும் அல்லல் உற்றது. பாலின் வெண்மை நிறத்தில் சிறு கருப்புள்ளி ஒன்று கலந்து அது பால் முழுவதும் சிறிது சிறிதாகப் பரவுதலைப் போல என் இதயம் உளைச்சல் கண்டது. இன்று எப்படியாவது அண்ணனைக் கேட்டுவிட வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டேன். ஆனல் எப்படித் துணிந்து கேட்பது? விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது? இந்தப் போரில் என் எண்ண அலைகள் ஒன்றுக்கொன்று அடித்துக்கொண்டு அமைதியின்றிக் கிடந்தன. என்ன இருந்தாலும் நான் பெண். அண்ணன் ஆண்மகன். அதிலும் எனக்கு மூத்தவன்.

வாசுகி, தனியாக அண்ணனின் அறைக்குள் நுழைய வேண்டிய அவசியம் என்ன? அதுவும் நான் இல்லாத நேரத்தில்! என்றுமே அப்படிச் செய்யமாட்டாளே! வழி பிறழ்ந்து அடி எடுத்துவைக்கும் விவேகம் அற்றவள் அல்லவே வாசுகி. இருந்தாலும் எதையும் என்னிடம் கூறியிருக்கலாமே! அவள் பேச்சுக்கு நான் என்றுவது மறுப்பு கூறியிருக்கிறேனு? அண்ணனைப் பற்றி ஆயிரம் கேள்விகள் கேட்டபோது எல்லாம் அலுக்காமல் பதில் சொல்கிறேனே! அப்படியிருக்க என்னையும் மீறி அண்ணனை அவள் தனியே சந்தித்ததற்குக் காரணம்? என் இதய இயந்திரம் ஓய்வின்றி வேலை செய்து சூடேறியது. இன்றுவரட்டும் அண்ணன் எப்படியாவது இதைப்பற்றித் தெளிவாக்கிக்கொள்ள வேண்டும். இந்த நிலைமையைவளரவிட்டாலும் நல்லதாக எனக்குப் படவில்லை இதற்கு முடிவைக் கண்டுவிட வேண்டும் — என்ற எண்ணத்தில் தீர்மானம் செய்துக்கொண்டேன். இரவு எட்டு மணிக்குமேல் இருக்கும்; அண்ணன் வந்தான். சாப்பிட்டான். ஆனல் அவன் முகததில் சிந்தனை ரேகைகள் படர்ந்தவண்ணம் இருந்தன. அமைதியான சூழ்நிலையை நல்ல சந்தர்ப்பமாக நான் பயன்படுத்திக்கொண்டு அறையினுள் நுழைந்தேன். சற்று படபடப்பாகவே பேசினேன். குரலும் சற்று கனத்து இருந்தது. அண்ணு! அண்ணு! எனக்குப் பயமாகவும இருக்கிறது. இந்த நிலமையை வளரவிட்டால் விளைவு என்னவாகும? ஊர் நம்மைப் பற்றி என்ன பேசும்? வாழ்வாங்கு வாழும நமக்கு ஒரு வடு என்றுல் நல்லதா? சொல் என்று சற்று உரக்கக் கூறினேன். இத்தனையும் கேட்ட அண்ணன் முகத்தில் எந்தவிதமான மாறுதலும் தென்படவில்லை. மாறுபட்ட உணர்ச்சிகளின சாயல் எதுவும் அவன் பார்வையிலோ



முகத்திலோ ஒரு சிறிதும் பிறக்கவேயில்லை. சிலையாக இருந்த அவன் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தான். ஒரு முறை நீண்ட பெருமூச்சுவிட்டான். உடலை நெளித்து சோம்பலைப் போக்கிக்கொண்டான். பிறகு, விச்சிராந்தியாக அமைதி பெற்றவனாக எழுந்துபோய், அவன் திருக்குறள் புத்தகத்தில் வைத்திருந்த ஒரு கடிதத்தை எடுத்து என்னிடம் நீட்டிவிட்டு, மீண்டும் தன் சாய்வு நாற்காலியில் அமர்ந்துவிட்டான். வியப்பு மேலிட்ட நான் அண்ணன் கொடுத்த கடிதத்தைப் பிரித்து ஆச்சரியக் கண்களுடன் படிக்கலானேன்.

"அண்ணன் முத்துவுக்கு தங்கை வாசுகி எழுதியது....."

கடிதத்தின் துவக்க வரிகளைப் படித்ததுமே அதிர்ச்சியால் அயர்ந்து போனேன்நான் விதவிதமான உருவங்களைப் பெற்ற வெவ்வேறு நினைவுபிம்பங்கள் என் மனத்திரையில் ஆட்டம் போட்டுக்குதித்தன. விவரிக்க முடியாத உணர்வு அலைகள் விதம் விதமான சத்தம் போட்டு என் இதயக் கரையைத் தாக்கின.இவற்றின் அதிர்ச்சியைத் தாங்கிய வண்ணம் கடினமான இதய வேதனையுடன் கடிதத்தைத் தொடர்ந்து படிக்கலானேன்.



"இது நான் உங்களுக்கு எழுதும் முதல் கடிதம் கடைசி கடிதமும் ஆகும். கடிதத்தை நீங்கள் என்னிடமிருந்து எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள் அப்படியே இருந்தாலும் அந்தக் கடிதத்தின் வடிவம் வேறுவிதமாகத்தான் இருக்கும் என்று உலகம் எண்ணலாம்.

உலகம்! அதைப்பற்றித்தான் நானும் எத்தனையோமுறை சிந்தித்திருக்கிறேன். அது ஒரு விந்தை நிறைந்த சந்தை. விலை மதிப்பற்ற பொருட்கள் அங்கே கேட்பாரற்றுக் கீழே சிதறிக் கிடக்கும் அற்பப்பொருட்களுக்கு அங்கே அபார விலையிருக்கும்.

என்கணவர் பூனுவில் பந்தயத்துக்காகக் குதிரையை மட்டும்தான் வைத்திருந்தார் என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் குதிரையோடுகூட அவருக்கு அங்கே ஒரு குமரியும் இருந்தாள், இது பலருக்குத் தெரியாது. தன் சொத்தான குதிரைக்கும் குமரிக்குமாக அளித்து அகனுல் மனம் உடைந்து துவண்டுபோனவர் அவர். அந்தப் பரிதாபநிலை எனக்குமட்டுமே தெரியும். அதை விட மிகப் பரிதாபமான ஒருநிலை.

அண்ணு! என் கணவருக்கு தங்கம் என்றொரு தங்கை. திருமணம் என்ற விழா அவள் வாழ்வில் ஏற்பட்டதே தவிர, விழா முடிந்து வாழ்வைத் துவக்க அவளால் முடியவில்லை. காரணம் திருமணம் ஆன அன்று மாலையே அவள் கணவர் பாம்பு கடித்து மரணம் அடைந்துவிட்டார். அன்றுமுதல் மஞ்சளும் குங்குமமும் இழந்த மங்கையாக அண்ணன் வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டாள் தங்கம். இன்றைய நிலையில் நாங்கள் இருவரும் ஒரே வர்க்கத்தினர். ஆனால் நானுவது, குடும்பம் என்ற பந்தத்தில் சிறிது காலம் இருந்துவாழ்வு என்றால் என்ன என்ற முன்னுரையை யாவது படித்தேன். ஆனால் அவள் மேல் அட்டையிலேயே தங்கி பழு தடைந்துவிட்டாள்.

அண்ணு! நான் இப்படி எழுதுவதைத் தவருக எண்ணவேண்டாம். ஆகும் நெறியையும் ஆகா நெறியையும் நன்கு உணர்ந்தவர்கள்நீங்கள். கல்லும் முள்ளும் நிறைந்திருக்கிற சமுதாயத்தைக் கனி மலர்ச் சோலையாக்க எண்ணம் கொண்டவர்கள். புதுமை-புரட்சி இவைகளில் தணியாத தாகம்கொண்டவர்கள். பாசி படிந்த சமுதாயத்தைப் பழுதற்ற தாக்கி அதனை அல்லிமலர்த்தடாகமாக்க எண்ணுபவர் தாங்கள், என் இனத்தின் உறுப்பினள் ஒருத்திக்காக நான் வாதாடுகிறேன். வாழ்வு என்றால் என்ன என்று சொல்லத்தொடங்கும் மணவிழா அவள் வாழ்வை முடித்து பாலையாக்கிவிட்டதை எண்ணுமபோது அந்த வாழ்வில் ஒரு சிறிதாவது உழன்ற எனக்கு அவள் புதியதொரு வாழ்வு நடத்தவேண்டும் என்ற ஆசை இருக்கிறது

தங்கம் தங்கமானவள், பட்டணத்தின் பகட்டுகள் அவளை அணுவளவும் மாற்றவில்லை. பண்பிலிருந்து பிறழச்செய்யவில்லை. அற நெறியிலிருந்து அகலச் செய்யவில்லை. தங்கம் பத்தரைமாற்றுத் தங்கமாகவே இருக்கிறாள். அவள் என் கணவரின் தங்கை அல்ல இப்போது — என் தங்கை. என் உடன்பிறந்தவள். அவள் இருண்ட வாழ்வுதனில் ஒளிபெற நீங்கள்தான் ஆவன செய்யவேண்டும். சமுதாயச் சதித்திட்டங்களில் எதிர் நீச்சல்போடும் உங்களைப்போன்றவர்களால்தான் இத்தகைய கண்ணீரில் அல்லலுறும் பெண்களைக் கரைசேர்க்க முடியும் உங்கள் புனித கரங்களால்தான் அந்தக் கண்ணீர் துடைக்கப்பட முடியும். நீங்கள் மனம்வைத்தால் தங்கம் புத்தம்புதிய வாழ்வை நிச்சயம் பெறுவாள். உங்கள் இதயம் இதற்கு இடம்தரும் என்று நிச்சயமாக நான் நமபுகிறேன். அவளுக்குச் சீதனமாகத்தர என்னிடம் ஒன்றுமில்லை. ஆனால், என் தந்தை என் திருமணத்தின்போது எனக்குச் செய்த சீர்வரிசைகள் அப்படியே இருக்கின்றன. அவற்றை நான் இனி என்ன செய்யப்போகிறேன்? இனி எதற்கு அவையெல்லாம்? அவற்றை என் அன்பளிப்பாக அவளுக்கே தந்துவிட தீர்மானித்துவிட்டேன். அவள் வாழ்வு இனியாவது சிறக்கவேண்டாமா? என் நம்பிக்கை வீண்போகாது என்று எனக்குத் தெரியும். உங்கள் உடன்பிறவா சோதரி நான் உங்களைக் கேட்டுக்கொளளுகிறேன். அவளுக்கு வாழ்வை நான் வாங்கித்தருவது என் கணவருக்கு நான் வாழ்நாள் முழுவதும் செலுத்தும் மானசீகமான அஞ்சலியாகும் இனி, தங்கம் உம்முடையவள். இதற்கு நீங்கள் ஆவன செய்யவேண்டும். வாழ்வின் எல்லையோரத்தில் நின்று கொண்டு யாசகம்செய்யும் என் வேண்டுகோளை நிராகரிக்காதீர்கள். உங்கள் தங்கையின் ஆவலை நிறைவேற்றுங்கள் என்று உங்களை தாளதொட்டு வேண்டிக் கொள்ளுகிறேன். இன்னும் ஒன்று. என் ஒன்றுவிட்ட அண்ணன் உங்கள்தங்கை மனோன்மணியைச் சென்ற ஆண்டுபார்த்திருக்கிறான். இது மனோன்மணிக்குத்தெரியாது. ஒரு முறை என்னுடன் பூங்குடி கிராமத்துக்கு வந்தபோது. நானும் என்னுடன் உங்கள் தங்கை மனோன்மணியும் ஆற்றுக்குப் போனசமயம், மறைந்திருந்து பார்த்திருக்கிறான். இப்போது சென்னையில் நல்ல அலுவலில் இருந்துவருகிறான். அவன் மனோன்மணியை மணந்துகொள்ள மிகவும் ஆசையாய் இருக்கிறான். இதையும் விரைவில்முடிக்கவும். நான் சமர்ப்பிக்கும் இந்தகோரிக்கைக்கு உடனடியாக பலன்கிடைக்க வேண்டும்."

இப்படிக்கு உங்கள் சகோதரி.

வாசுகி.

கடிதத்தைப் படித்து முடித்ததும் என்கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. கடிதம் எப்படி அண்ணன் கைக்கு வந்தது என்று கேட்டேன். அன்று ஒரு நாள் நான் கோயிலுகுப்போய் திருமபிவந்தபோது. வாசுகி அண்ணனைத தனியாகச் சந்திந்துவிட்டுப்போனாளே— என் உள்ளத்தில் ஆயிரம் ஐயங்களைப் புகுத்தினாளே— அன்றைய தினம் இந்தக் கடிதத்தைக் கொடுத்து விட்டுத்தான் போயிருகிறாள். வேறு ஒன்றும் இல்லை. அண்ணன் சொன்னான்.

தாளமுடியாத சுமையால் என் உள்ளம் வெதும்பிக் கனிந்து உருகியது. வாசுகி உன்னை எவ்வளவு தவறுதலாக நினைத்துவிட்டேன்? எப்படியெல்லாம் எடைபோட்டுவிட்டேன்? நீ உத்தமமானவள். உண்மையில் உன்னதமானவள். நம் பெண் குலத்துக்கே சிறப்பைத் தேடித்தரக்கூடியவள். தங்கத்தின் வாழ்வை உன்வாழ்வாகவே ஏற்றுக்கொண்ட உன்னை இத்தரணி மெச்சும். வாடாமல்லியை நான் அடிக்கடி சூடிக் கொள்ளுகிறேன். அதன் சிறப்புக்கு உதாரணம் நீதான். நீ வாழ்வில் மலர்ந்து மணம வீசியபோது இருந்ததைவிட, வாடிப்போய்விட்ட பிறகுதான் உன் பண்பு மணம் பன்மடங்கு அதிகமாக வீசுகிறது. நீ உண்மையிலேயே வாடாமல்லிதான் வாசுகி, வாடாமல்லிதான். ○

மே 14 முதல்

சென்ன மிட்லண்ட் (ஏர்கண்டிஷண்ட்)
பிரபாத் & சாந்தி
மற்றும் தமிழ்நாடெங்கும்



சுதர்சனம் பிக்சர்ஸ்

ஹல்லோ மிஸ்டர் ஜமீன்தார்!



தயாரிப்பு & டைரக்ஷன் K. J. மகாதேவன்

பூரண உரிமையாளர்கள்
மதேன்மணி
பிக்சர்ஸ்
திருப்பூர்

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனு அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். வண்ணைதுரை.